

வி.எச்.ஆர்
பெருங்காயம்



உலகில் சிறந்த சரும ரோக நிவாரணி

தேமல், ரணம், புண் முதலிய வற்றை ஜாம்-பெக் குணப்படுத்தும்.

சருமக் கோளாறுகள், காயங்கள் முதலியவற்றைத் திருப்திகரமாகக் குணப்படுத்த ஜாம்-பெக் உலகில் சிறந்த நிவாரணியாகும். வெட்டுக் காயம், ரணமுள்ள இடங்களில் இந்த அற்புத மெழுகைத் தடவுங்கள். வெகு சீக்கிரம் குணப்படுத்திவிடும். ஜாம்-பெக்கிலுள்ள அற்புத மூலிகைச் சத்துக்கள் சருமத்திற்குள் சென்று, வலி, வீக்கத்தைக் குறைத்து சீழ்வடிதலை நிறுத்திவிடும். ஜாம்-பெக் தழும்பின்றி குணப்படுத்தும். ஜாம்-பெக் மெழுகு ரூ. 1 அல்லது 2—4. ஜாம்-பெக் ஸோப் ரூ. 1. ஜாம்-பெக் பவுடர் ரூ. 1. ஏஜண்டுகள்:—மெஸர்ஸ் நாதா அண்டு கம்பெனி, பி. டி., மதராஸ்.

எப்பொழுதும் ஜாம்-பெக் உபயோகியுங்கள்.

ZAM-BUK

மிருகக் கொழுப்பற்றது.



கர்ப்பச் சேதத்துக்குப்

பிறகும், பிரஸவத்துக்குப் பிறகும், நீடித்த ஜுரங்களுக்குப் பிறகும் தலைமயிர் அதிகமாகக் கொட்டுவதுண்டு. சாதாரண ஜுரங்களுக்குப் பிறகும் மயிர் உதிர்வதுண்டு. அதிர்ச்சி ஸஹிதமான ஜுரமானாலும் மயிர் அபரிமிதமாகக் கொட்டும். சில சமயம் கூந்தல் விடாமல் உதிர்ந்து கொண்டேயிருக்கும். எந்தக்காரணத்தால் மயிர் உதிர்ந்த போதிலும் கேசவர்த்தினியைக்கொண்டு மயிர் உதிர்வதை நிறுத்துங்கள்.

உதிர்ந்த கூந்தலுக்குப் பதில் இளம் புதுக்கூந்தலைப் பெறுங்கள். கேசவர்த்தினியின் உதவியால் அற்பகேசத்தை அபரிமித கேசமாக்குங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைக் காப்பது, விருத்தி செய்வது, அழகுபடுத்துவது. விலை அணு 12; மேற்செலவு வேறு. எல்லாக்கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:
தென் இந்திய ரஸாயன சாலை,
ஆர். எஸ். புரம் - கோயமுத்தூர்.

ரூ. 50,000 மதிக்கப்பெற்ற நகைகள்

பொது மக்களுக்கு அளிக்கப்படுகின்றன

"லண்டன் நியூ கோல்டால்" இப்பொழுது புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்டவை. இதை உலகத்தின் எட்டாவது அதிசயம் என்றே சொல்லலாம். இது இப்பொழுது இந்தியா முழுவதும் பிரபலமாகிவிட்டதால், இதை இன்னும் பிரபலப்படுத்தவேண்டிய அவசியமுமில்லை. பொதுமக்களும, பத்திரிகைகளும் இதையே அதிகமாகப் புகழ்கிறார்கள். இந்த கெமிகல் தங்கத்தின் நிறம் மாறாமலிருப்பதால், இதிலிருந்து நல்ல நகைகள் செய்யலாம்.

இந்த பிரபலப்படுத்துவதற்காக இப்பொழுது 6 தோலா "லண்டன் நியூ கோல்ட்" 2ஜதை வளையல்கள் 2ஜதை தோடுகள் 2மோதிரங்கள் மிகவும் அழகாகச் செய்யப்பட்டதுமான நகைகள் சாம்பிளாக அனுப்பப்படும். இந்த குறைந்த கட்டணம் சில நாட்களுக்குத்தான். உடனே எழுதவும்.

இலவசம்:—விவரங்கள் அடங்கிய படங்களுடன் கூடிய காட்லாக்இனும்

London Commercial Co.,

(EAB) Post Box 165. (S M.M) LAHORE (India)

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோஅல்லது
சருமப்படுவனோ இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்

காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மல விரேசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி.

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாக்கெட் ஒரு அணு. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, நைனியப்ப நாயக்கன் தெரு,
பி. டி., மதராஸ்.

டோங்ரேயின்

பாலாமிருதம்

பிரசித்தி பெற்ற

குழந்தைகளின் டானிக்

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்கரூ.2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ.5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ5. ஆருடம்3கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், திருநீர்மலை, குரோம்பேட்டு போஸ்டு, எஸ். ஐ. ஆர்.

Printed and Published by T. S Visvanatha Iyer, B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras. *Editor*, C. R. Srinivasan, B. A

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol. 13 No. 37 11-10-'42 Price 2 Annas

சிறுவர் கதை

★

அரசனும் விறகு வெட்டியும்

★

“குஞ்ஜா”

முன் காலத்தில் இங்கிலாந்தில் ஒரு அரசன் ஆண்டு வந்தான். அவனுக்கு வேட்டையாடுவதில் மிகப் பிரியம். ஒரு நாள் தன் சிநேகிதர்களுடன் வேட்டையாடும் போது ஒரு காட்டுப் பன்றியை துரத்திக் கொண்டு நெடுந்தூரம் சென்றான். ஓடி வந்த களைப்பினால் அவனுடைய குதிரை கீழே விழுந்து இறந்து விட்டது. தன் சிநேகிதர்கள் பின்னால் வருகிறார்களோ என்று நான்கு திசைகளிலும் பார்த்தான். அவர்களில் ஒருவரும் தன்னைப் பின் தொடரவில்லையென்பதை அப்பொழுது தான் உணர்ந்தான். பிறகு திக்கு திசை தெரியாமல், காலிழுத்த படியெல்லாம் அந்தக் காட்டில் திரிந்தான்.

அப்படி போய்க்கொண்டிருக்கையில், ஒருமரத்தடியில் யாரோ இருவர் பலமாகப் பேசிக் கொண்டிருந்தனர். அரசன் அவர்களறியாதபடி அவர்கள் பேசுவதை ஒளிந்து கவனித்தான். ஒரு விறகு வெட்டியும் அவனுடைய மனைவியும் தங்கள் சுமைகளைக் கீழே வைத்துவிட்டு ஏதோ சல்லாபம் செய்து செய்து கொண்டிருந்தனர்.

விறகு வெட்டி:— “இந்த பூலோகத்துக்கு வந்த கஷ்டமெல்லாம் ஒரு பெண்ணாலே தான் யாரோ ஒருத்தி ‘ஈவு’ என்று பெயராம். அவள் ஒரு பழம் சாப்பிடப் போக உலகத்தாருக்கே எல்லாவிதமான கஷ்டங்களும் வந்து சேர்ந்தன.”

இங்கிலீஷ் புராணத்தில் கடவுள் முதல் முதலில் ஆடம், ஈவு என்ற இருவர்களை உற்பத்தி செய்து அவர்களை ஒரு ரம்மியமான பழங்கள் நிறைந்த தோட்டத்தில் இருக்கச் செய்ததாகவும், அவர்களை ஏதோ ஒரு குறிப்பிட்ட பழத்தை மட்டும் சாப்பிட வேண்டாம் என்று கூறியதாகவும், ஆனால் கடைசியாக ஈவின் பிடிவாதத்தால் அப்பழத்தை அவர்கள் சாப்பிட்டதாகவும், அதனால் தான் இந்த உலகத்திற்கு இவ்வளவு கஷ்டங்களும் வந்தனவென்றும் கூறியிருக்கிறது.

மனைவி:— “ஆமாம், அந்த பெண்ணுக்கு நாக்கு நீளம். நான் அவள் மாதிரியிருந்தால் அப்படி செய்திருக்கவே மாட்டேன்.”

இவற்றைக் கேள்வியுற்ற அரசனுக்கு ஆச்சரியமுண்டாயிற்று. சட்டென்று அவர்கள் முன் வந்து நின்று “அடே! நீங்கள் விறகு வெட்டி தான் ஜீவனமோ” என்று கேட்டான்.

விறகு வெட்டி:— “ஆமாம் சாமி. எங்கள் தலையில் அப்படித் தான் அந்த பாழாய்ப் போன கடவுள் எழுதியிருக்காரு” என்று பதிலுரைத்தான்.

‘சரி, நீங்கள் இன்று முதல் விறகு வெட்டும் தொழிலை நிறுத்தி விடுங்கள். என்னோடு அரண்மனைக்கு வாருங்கள். அங்கே சுகமாக வாழலாம். ஏன் வீணாகக் கடவுளை நிந்திக்கிறீர்கள்” என்று கூறி அவர்களைப் பின் தொடர்ந்து அரசன் தன் அரண்மனை வந்து சேர்ந்தான். அன்று முதல் அவர்களுக்கு ஒரு தனி அறையில் ஒரு மேஜை மீது சாப்பாடுகொடுக்கப்படும். தவிர மற்றும் அவர்களுக்கு வேண்டிய எல்லாவித சௌகரியங்களும் செய்துகொடுக்கப்பட்டன. ஆனால் அவர்கள் சாப்பிடும் போதெல்லாம் ஒரு பிளேட்டின் மேல் பெரிய கப்பை மூடி சேவகர்கள் கொண்டு வந்து அவர்கள் டேபிளின்மேல் ஒரு ஓரத்தில் வைத்து விட்டு “இதை ஒருவரும் திறக்கக்கூடாது என்று ஆக்ஞை” என்று சொல்லி விட்டுப்போவான். இப்படியேபிரதிதினமும் நடந்து வந்தது. நாளடைவில் அந்த விறகு வெட்டியின் மனைவிக்கு தினம் தோறும் மூடி வைக்கப்படும் கோப்பைக்குள் என்ன தான் இருக்கிறதென்று பார்க்க அவா உண்டாயிற்று. அவள் அதை திறக்கப் போகும் போதெல்லாம் விறகு வெட்டி அவளைப் பிடித்திழுத்து அரசனுடைய ஆக்ஞையை ஞாபக மூட்டுவான். அவளுக்கு அதைப் பார்த்துத் தீர வேண்டுமென்று ஆசை அதிகரித்தது. ஒரு நாள் தான் அதை எப்படியும் திறந்து பார்த்த பிறகு தான் சாப்பிடப் போவதாக சாகஸம் செய்தாள். விறகு வெட்டி எவ்வளவு சமாதானம் கூறியும் கேட்க வில்லை: கணவனையும் மீறி அந்தக்கோப்பையைத்திறந்து பார்த்தாள். அதற்குள்ளிருந்த சுண்டெலி “தொப்”பென்று குதித்து வெளியே ஓடி விட்டது. அரசன் ஆக்ஞையை மீறியதுமல்லாமல் அதற்குள்ளிருக்கும் சுண்டெலியையும் வெளியில் ஓட விட்டதைப் பற்றி இருவரும் மனக் கிலேசமடைந்தனர்.

சற்று நேரத்திற்கெல்லாம் அரசன் அவர்களை வரவழைத்து “யார், அந்த கப்பைத் திறந்து அதிலுள்ளிருந்த சுண்டெலியை வெளியில் விட்டது?” என்று வினவினான். அதற்கு விறகு வெட்டி “பிரபோ, என் மனைவிக்கு அதற்குள் என்ன இருக்கிறது என்பதை பார்க்க மிகுந்த அவா உண்டாயிற்று. நான் எவ்வளவு தடுத்தும் அதை ஒரே பிடிவாதமாக திறந்து பார்த்தாள். சுண்டெலி ஓடிவிட்டது” என்று பதிலளித்தான்.

அரசன்:— “சரி, நான் உங்களைக் காட்டில் சந்தித்த போது நீங்கள் பேசிக் கொண்டது ஞாபகமிருக்கிறதா? ஏதோ ஈவு செய்த காரியத்தினால் தான் உலகமே கஷ்டத்திலாழ்ந்து விட்டதென்று பேசிக் கொண்டீர்கள். அப்பொழுது உன் பெண்டாட்டி “நான் அவள் மாதிரியிருந்தால் அப்படி செய்திருக்க மாட்டேன்” என்று பெருமை யடித்துக் கொண்டாளே, ஞாபகமிருக்கிறதா? இன்று அவள் தானே ‘செய்யாதே’ என்ற காரியத்தை செய்யத் தலைப்பட்டாள். தங்களுடைய குணங்களையும் நிலைமையையும் சரியாகத் தெரிந்து கொள்ளாமல் ஊராரைத் தூற்றலாமா? இப்பொழுது ஈவுக்கும் இவளுக்கும் என்ன வித்தியாசம்” என்று கூறி விட்டு அவர்களைப் பழைய படி விறகு வெட்டும் தொழிலுக்கே அனுப்பி விட்டான்.



பிராஞ்சு:- பெனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.



ஒரு புது யுத்த சாதனம். இது ஜலத்தில் மிதந்து போகும் டாங்கி.

சென்றவார நிகழ்ச்சிகள்

இந்திய ஸேனாதிபதி திட்டம்

புதிய டில்லியிலுள்ள பிரிட்டிஷ் அமெரிக்க நிருபர்கள் அளித்த விருந்து உபசாரத்தில் இந்தியாவின் ஸேனாதிபதியாகிய ஜெனரல் வேவல் பேசுகையில் கூறியதாவது:—

பர்மாவை நாம் இழந்தது முதல் மீண்டும் அதை நாம் வசப்படுத்திக்கொள்ளுவது பற்றி நான் திட்டம் போட்டு வந்திருக்கிறேன். ஏனெனில் ஜப்பானுடன் போர் புரிவதில் பர்மா முக்கிய கேந்திர ஸ்தானங்களில் ஒன்றாகும். சீனருடன் மறுபடியும் சம்பந்தம் கொள்ளுவதற்கும், ஜப்பானை நாம் தாக்குவதற்கும் பர்மா நமது தளமாக இருக்க வேண்டியதவசியம்.

ஆகவே மீண்டும் பர்மாவை வசப்படுத்துவதுபற்றி நான் வெகுவாக யோசித்து வருகிறேன். ஆனால் என்னுடைய திட்டத்தை நான் வெளியிட முடியாது. பிரச்னை ரொம்பக் கஷ்டமானது. போதிய அளவு ஸப்ளை கிடைக்காமலிருப்பது தான் எனக்கு எப்பொழுதும் உள்ள கஷ்டம். ஆனால் இப்பொழுது நிலைமை அபிவிருத்தி அடைந்திருக்கிறது. தேவையான தளவாடங்கள் இப்பொழுது நமக்குக் கிடைத்து வருகின்றன. கடல் ஆதிக்கம் பெறுவதுதான் இந்த யுத்தத்தின் முக்கிய அம்சமாக இருக்கிறது.

ஜப்பான் நம்மீது திடீரெனப் பாய்ந்தது. அவர்கள் பழைய யுத்த முறையிலேயே இன்னும் இருந்து வருவதாக நாம் எண்ணினோம். இனி அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பதே கேள்வி. உட்கொண்டதை ஜீரணிக்கவே அவர்கள் விரும்புகின்றனர் என்று நான் நினைக்கிறேன். இப்போது ஆஸ்திரேலியா அல்லது இந்தியா மீது படையெடுப்பதுபோல் பெரிய காரியம் எதிலும் இறங்க அவர்கள் விரும்பவில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. ஜப்பானிய விமானப்படையின் பலம் இனி மிகவும் ஒடுங்கிவிடுமென்று நான் எண்ணுகிறேன். தங்கள் நாட்டிலேயே அவர்கள் ஏராளமான விமானங்களை வைத்திருக்க வேண்டியிருக்கிறது. ரஷ்யாவைக் கவனித்து வருவதற்காக மஞ்சூரியாவிலும் தென்மேற்கே பஸிபிக்கிலும்கூட ஏராளமான விமானங்களை அவர்கள் நிறுத்தி வைக்க வேண்டியிருக்கிறது. ஆசியாவில் பெருத்த ஒரு வல்லரசாக விளங்க வேண்டுமென்பதே ஜப்பானின் ஆவல், ஆகவே அது ரஷ்யத் தொல்லையைச் சமாளித்து சீன விவகாரத்தை முடித்தாக வேண்டும்.

* * * *

காங்கிரஸ்—லீக் சமரஸ முயற்சி

காங்கிரஸ்-லீக் சமரஸம் ஏற்படுத்த மத்திய மாகாணத்தில் பலத்த முயற்சிகள் நடந்து வருகின்றன. இந்தசமரஸமில்லாமல் அதிகாரத்தை விட்டுக்கொடுக்கும்படி பிரிட்டிஷ் சர்க்காரை நிர்பந்திக்க முடியாதென்று உணரப்படுகிறது. ஆகவே ஹிந்து முஸ்லிம் பிரதிநிதிகளும் மாணவர் ஸ்தாபனங்களின் தலைவர்களும் மற்றவர்களும் ஒரு கூட்டத்துக்கு ஏற்பாடு செய்து வருகின்றனர். இந்த யோசனைக்கு ஆதரவாகத் தயாரிக்கப்பட்டுள்ள விஞ்ஞாபனத்தில் இது வரையில் 50 ஆயிரம் பேருக்கு மேல் கையொப்பமிட்டிருக்கின்றனர்.

* * * *

நெருக்கடி தீர ராஜாஜி யோசனை

ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார் பின் வருமாறு ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

காங்கிரஸைச் சேராமல் தனித்து நிற்கும் கோஷ்டியினர்களையெல்லாம் ஒன்று திரட்டி அவர்கள் ஒரு ஒப்பந்தத்துக்கும் வரும்படிச் செய்து அவர்களைக் கொண்டு காங்கிரஸுடன் போராட ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் இந்தியாக் கவர்ன்மெண்டு இவர்களுக்கு போதிய ஆதரவு அளிக்க வேண்டுமென்றும் 'மாஞ்செஸ்டர் கார்டியன்'' கூறியுள்ள யோசனை மிக்க ஏமாற்றத்தைத் தருகிறது. கர்னல் அமெரி மிக்க சாமர்த்தியத்துடன் இந்தியாவைப்பற்றி அரைகுறையான உண்மைகளை வெளியிடுவதால் இந்தியப் பிரச்னை சீர்ப்பட்டு விடாது. யுத்த ஏற்பாடுகளுக்கும் உதவி கிடைக்காது. மிஸ்டர் அமெரி இவ்விதம் உண்மையை மறைத்து மழுப்பிப் பேசுவதைக் கேட்டுக்கொண்டு நேசதேசங்கள் சும்மாவிருப்பது கூடாது.

இப்போது யுத்தம் சம்பந்தமான ஏற்பாடுகளுக்குக் குந்தகமாக விருப்பதெல்லாம் ஒரு விஷயம்தான். இந்தியர்கள் தற்போது யுத்த விஷயமாகக் காட்டிவரும் அசிரத்தையை விட்டு மனப்பூர்வமாகவும் தீவிரமாகவும் யுத்த ஏற்பாடுகளில் கலந்துழைக்க வேண்டுமென சர்க்கார் கோருகிறார்கள். இவ்வித நிலை ஏற்படுவதற்கு வழியுண்டு. இந்தியாவில் சர்விஸைச் சேர்ந்தவர்கள் சொல்லுவது தான் இறுதி வார்த்தையென்றும் அதற்கு மேல் மனித முயற்சியே இல்லையென்றும் முடிவு கட்டிவிடக் கூடாது.

மனித முயற்சியால் முடியாத காரியம் ஒன்றுமில்லை ஆனால் மனம்தான் வேண்டும். மனமுண்டானால் வழியுண்டு. அதுவும் சாதாரண வழியல்ல—ராஜாங்க பாதை உண்டு என்றே நான் சொல்லுவேன். பிரிட்டிஷ் பார்லிமெண்டு அடிக்கடி சொல்லுவதுபோல தங்கள் பொறுப்பை உணர்ந்து நடக்க வேண்டும் வைஸ்ராய் கொண்டுள்ள அச்சத்தையும் துவேஷத்தையும் விடும்படி சொல்ல வேண்டும். இந்தியாவில் பற்பல வகுப்பினரின் மதிப்புக்கும் பாத்திரமாகவுள்ள சிலரை வைஸ்ராய் பொறுக்கி எடுத்து (அவர்கள் சிறையில் இருப்பவரானாலும் சரி, வெளியில் இருப்பவரானாலும் சரி) யுத்த காலத்தில் ஸர்க்காரை நடத்த அவர்களை தமது ஸகாக்கள் என அறிவித்துவிட வேண்டும். ராணுவ காரியங்கள் மட்டும் இப்போதிருப்பதுபோல பிரிட்டிஷ் மந்திரி சபையின் ஆதிக்கத்திலும் மேற்பார்வையிலுமே யிருக்கட்டும். ஸர் கிரிப்ஸ் வந்திருந்தபோது காங்கிரஸே இதையொப்புக்கொண்டிருக்கிறது. வைஸ்ராய் சிறையிலிருப்பவர்களை நியமித்து, அப்பதவியை ஏற்பதோ மறுப்பதோ அவர்களின் பொறுப்பில் விட்டுவிட வேண்டும். வெளியிலிருக்கும் நபர்கள் அவர்கள் அந்த பொறுப்பை மறுக்கமாட்டார்கள் என்றே நம்புகிறார்கள். யாராவது மறுத்தால் வைஸ்ராயுடன் கலந்து மற்றவர்கள் அவருக்குப் பதில் ஒருவரை நியமித்துவிடலாம். யுத்தத்துக்குப்பின் கவனிக்க வேண்டிய பிரச்னைகளை நேசதேசங்களின் மத்தியஸ்தப்படி பிறகு திட்டம் செய்து கொள்ளலாம்.

இந்த யோசனை ஆகாத யோசனையல்ல. இதை அநுஷ்டானத்துக்குக் கொண்டு வருவதிலும் கஷ்டம் இல்லை. இந்த யோசனையை அதிகாரிகள் ஏற்றுக்கொண்டால், இந்தியாவின் நிலை மாறுவதற்கான அருமையான ஒரு வழி பிறந்துவிடும். நியாய புத்தியுள்ள ராஜதந்திரிகள் அடங்கிய எந்த ஸ்தாபனமும் வேண்டுமானால் என்னைக் கேள்விகள் கேட்கலாம். நான் தக்க பதில் சொல்லி, அந்த ஸ்தாபனங்களைத் திருப்திப்

படுத்தத் தயாராகவிருக்கிறேன். யோசனைகள் கூற என்னைப் போல யோக்கியதையுடைய இந்தியாவிலுள்ள மற்றவர்களும் இதற்குத் தயார்தான்.

* * * *

மிஸ்டர் ரூஸ்வெல்டுக்குக் கடிதம்

பிரிட்டனுக்கும், இந்தியாவுக்கும் மீண்டும் சமரசப் பேச்சு துவங்கக்கூடிய முறையில் மத்தியஸ்தம் செய்து வைக்குமாறு காந்திஜி மிஸ்டர் ரூஸ்வெல்டுக்கு எழுதியிருந்த ஒரு கடிதத்தை தாம் இந்தியாவிலிருந்து கொண்டு வந்ததாக மிஸ்டர் லூயி பிஷர் சென்ற மாதம் 30-ந்தேதி தெரிவித்தார்.

"அக்கடிதத்தை காந்திஜி சட்டமறுப்பு இயக்கத்துக்கு முன் எழுதினார். நேசக்கட்சியினர் அச்சுநாடுகளுடன் போர் புரிய இந்தியாவை தங்கள் ராணுவத் தளமாக வைத்துக் கொள்ள வேண்டுமென்று காந்திஜி என்னிடம் கூறினார்'' என்றும் மிஸ்டர் பிஷர் தெரிவித்தார்.

* * * *

இனியும் கவர்னர் ஆட்சி

இந்தியா பர்மா மசோதா சென்ற மாதம் 30-ந்தேதி காமன்ஸ் சபையில் வந்தது. யுத்த காலம் முடிந்து 12-மாத காலம் வரை 7-காங்கிரஸ் மாகாணங்களில் தற்போதுள்ள தற்காலிகஏற்பாடே நீடிக்க வேண்டுமென்று அம்மசோதாவில் விதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது, மேலும் அவசரக் கோர்ட்டுகளால் மரண தண்டனை விதிக்கப்பட்டவருக்குப் பிரிவிகவுன்ஸிலுக்கு அப்பீல் செய்து கொள்ளும் உரிமை இம்மசோதாப் படித் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. சர்க்காரிலிருந்து வருவாய் உள்ள யாரும் மத்திய சட்டசபை, ராஜாங்க சபை மெம்பராக விருக்கலாமென்றும் அதில் விதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

பர்மா சம்பந்தமாகச் சில விஷயங்கள் பற்றியும் இம்மசோதா தற்காலிகமாகச் சில விதிகளேற்படுத்தும்.

இந்தியப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு மேற்கொண்டு ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா வென்று கேட்ட கேள்விக்கு மிஸ்டர் அமெரி பதில் கூறியதாவது:—"இந்தியப் பிரச்னையைத் தீர்க்கப் பிரிட்டிஷ் ஸர்க்கார் மிகவும் ஆவலுள்ளதாயிருக்கிறது, ஒரு சமரசத்திற்கு உண்மையாக இடைஞ்சலாகவுள்ள ஒற்றுமையும் பொது உடன்பாடும் இந்தியர்களிடை ஏற்படாத வரை நமது யோசனைகளைத் திருத்தியமைப்பது யாதொரு பலனையும் கொடுக்காது''

* * * *

இந்தியா மந்திரி பதில்

அரசியல் பிரச்னை பற்றிச் சிறையிலுள்ள காங்கிரஸ் தலைவர்களுடன் கலந்து பேசத் தங்களுக்கு வசதி அளிக்குமாறு இந்தியாவில் உள்ள பல பிரபலஸ்தர்களும், பிரபல ஸ்தாபனங்களும் ஸர்க்காரைக் கேட்டுக் கொண்டனவா என்று காமன்ஸ் சபையில் ஒரு அங்கத்தினர் மிஸ்டர் அமெரியைக் கேட்டார்.

பண்டித நேரு தற்போது எங்கிருக்கிறார் என்றும், அவர் வெளியாரிடமிருந்து கடிதங்கள் பெறலாமா என்றும் கேட்கப்பட்டது.

மிஸ்டர் அமெரி:—சிறையிலுள்ள காங்கிரஸ் தலைவர்களுடன் கலந்துபேச என்னை யாரும் வசதி கோரவில்லை. பண்டித நேரு தமது குடும்பத்துடன் குடும்ப விஷயங்களைப் பற்றி மட்டும் கடிதப் போக்கு வரத்து நடத்த அனுமதிக்கப்பட்டிருக்கிறார். அவர் தற்போது எங்கிருக்கிறாரென்று சொல்ல நான் தயாராயில்லை.

மிஸ்டர் ஸோரன்ஸன்:—ஒரு சமரச ஒப்பந்தம் விளைப்பதற்காக காங்கிரஸைச் சேராத பல பிரபல அரசியல் வாதிகள் காங்கிரஸ் தலைவர்களுடன் கலந்து பேச விரும்பியது மிஸ்டர் அமெரிக்குத் தெரியுமா? பண்டித நேரு கிழக்காப்ரிக்காவில் இருக்கிறார் என்பது உண்மையா?

மிஸ்டர் அமெரி;—பண்டித நேரு இந்தியாவில் தான் இருக்கிறார். தற்போது யாரும் காங்கிரஸ் தலைவர்களுடன் கலந்து பேசுவதன் மூலம் ஒரு ஒப்பந்தம் ஏற்படுமென நான் எண்ணக் காரணமில்லை.

எல்லா இந்தியக் கட்சிகளும் சேர்ந்து தேசிய ஸர்க்கார் ஏற்படுத்துவது பற்றி ஒரு திட்டத்தை ஸமர்ப்பித்தால் பிரிட்டிஷ் ஸர்க்கார் அதை எதிர்க்க முடியாது என சமீபத்தில் ஸர் சுல்தான் ஆமத் கூறினார். இதைப் பற்றிய கேள்விகளுக்கு மிஸ்டர் அமெரி பதிலளிக்கையில், "ஸர் சுல்தான் ஆமத் குறிப்பிட்ட நிலைமை இப்போதைக்கு ஏற்படுமெனத் தோன்றவில்லை. அவர் குறித்த நிபந்தனைகள் பிரிட்டிஷ் சர்க்கார் அடிக்கடி வெளியிட்டு வந்திருக்கும் கொள்கைக்கு ஒத்தவையே, அங்ஙனம் ஒரு தேசிய ஸர்க்கார் ஏற்பட்டால் தற்போதைய அரசியல் முறைப்படி அந்தஸர்க்கார் இறுதியாக பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கே ஜவாப்தாரியாக இருக்கவேண்டும் இந்தியர்களின் சம்மதத்தின் பேரில் ஒரு அரசியல் ஏற்படும் வரை அந்த ஜவாப்தாரித்துவம் இருந்து வரும்'' என்றார்.

* * * *

இரண்டாம் போர்முனை

இரண்டாவது போர்முனை பற்றி மிஸ்டர் ஸ்டாலின் ஒரு அமெரிக்க நிருபரின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கையில் ஸோவியத் அதிகாரிகள் தற்போதுள்ள நிலைமையை நிதானிக்கையில், இரண்டாம் போர்முனை விஷயம் மிகவும் முக்கியமானதென்று கருதுகின்றனர் எனத் தெரிவித்தார்.

நேச நாடுகளின் உதவி சோவியத்துக்கு எவ்வளவு தூரம் உபயோகாயிருக்கிறது என்ற கேள்விக்கு ஸ்டாலின் பின்வருமாறு பதில் சொன்னார்;—"ஜெர்மன் பாஸிஸ்ட் படைகளில் பெரும் பாகம் தன்னுடன் போர் நடத்தும்படி ரஷ்யா நிர்ப்பந்தித்திருப்பதன் மூலம் நேச நாடுகளுக்கு விசேஷ உதவி புரிந்துவருகிறது. இந்த உதவியுடன் ஒப்பிடுகையில் இதுவரை சோவியத்துக்கு நேச நாடுகள் செய்துள்ள உதவி உருவானதாயில்லை,''

ஸோவியத் எதிர்ப்பு சக்தியில் இன்னும் எவ்வளவு எஞ்சியிருக்கிறது? என்று நிருபர் கேட்டார்,

ஸ்டாலின் கூறியதாவது:—"ஜெர்மன் கொள்ளையரை எதிர்த்து நிற்க ஸோவியத்துக்குள்ள சக்தியானது உலக ஆதிக்கம் பெறும் விஷயத்தில் பாஸிஸ்ட் ஜெர்மனிக்கோ அல்லது வேறெந்த அக்கிரம தேசத்துக்குமோ உள்ள சக்தியைவிட அதிகம்; எப்படியும் அதற்குக் குறைந்ததல்ல.

மேற்குறித்த பதில் அடங்கிய கடுதாசியில் ஸ்டாலினே கையெழுத்திட்டார்.

* * * *

யுத்த போக்கு பற்றி ஹிட்லர்

பர்லினிலுள்ள ஸ்போர்ட்ஸ் பிளாஸ்ட் என்ற கட்டத்தில் சில தினங்களுக்கு முன் ஹிட்லர் நாஜிக் கட்சிக் கூட்டத்தில் பேசினார். ஹிட்லர் கூட்டத்தில் பின்வருமாறு பேசினார்:—அடிக்கடி உங்களுக்கு முன்பு வர என்னால் இயலாதிருப்பது பற்றி நான் வருந்துகிறேன். இந்த மேடையிலிருந்து நான் உங்களிடை பேசி ஒரு வருஷமாகிறது. ஒவ்வொரு வாரமும் என்னால் பேச முடியாது.

நான் சொல்ல வேண்டியதை நமது சிப்பாய்கள் சொல்லி வருகிறார்கள்.

ஸ்டாலின்கிராடு பிடிபடுமென்பதை நீங்கள் நிச்சயமாக நம்பலாம். சில மாதங்களில் இவ்வளவு காரியங்களைச் செய்திருந்தாலும் இவை யாவும் ஒன்றுமில்லையாம். ரஷ்யாவின் இரும்பு ரிஸர்வில் 100-க்கு 55 முதல் 60 வீதமுள்ளதாயும் நாம் அதன் எண்ணெய்க் கிணறுகளையும் வசப்படுத்திக்கொண்டாலும் அதுவும் ஒன்றுமில்லையாம்.

பிரிட்டிஷார் ஜெர்மனியரிடம் என்றுமே இருந்திராத அவ்வளவு ஸப்மரீன்களை அழித்துவிட்டதாக நம்புகின்றனர். அவர்கள் தங்களுக்கு நற்காலம் பிறந்துவிட்டதென்றும்; இரண்டாம் போர்முனை ஏற்படப் போவதாகவும் கூறுகின்றனர். நாம் இதனை லக்ஷியஞ் செய்யவில்லை? நாம் இருக்கும் பக்கம் கூட திரும்பிப் பாராமல் முன்னேறிப் போயிருக்கிறோம். இதனால் நாம் இரண்டாம் போர்முனையைச் சமாளிப்பதற்கான முஸ்தீப்புகளைச் செய்யவில்லை என்ற அர்த்தமேற்படாது. நாம் எல்லாவிடங்களிலும் தயாராக இருக்க வேண்டும். 1941-42-ம் வருஷம் குளிர் காலத்தில் ஜெர்மன் ராணுவத்தையும் மக்களையும் கடவுள் பாதுகாத்தார். இவ்வருஷம் குளிர் காலத்தில் அதைவிடக் கேவலமான நிலைமை ஏற்படமாட்டாது. நாம் நமது கஷ்டங்களையும் கெட்ட காலத்தையும் சமாளித்து நமது படைகளைத் திருத்தியமைத்து மேற்கொண்டு முன்னேறித் தாக்குவதற்கு வேண்டிய முஸ்தீப்புகளைச் செய்தோம். சென்ற 3 வருஷ யுத்தத்தைப்பற்றி நாம் திருப்தியடையலாமென்று நினைக்கிறேன். அபாயங்களை லக்ஷியஞ் செய்யாமல் துணிவுடன் செயல் புரிய வேண்டியபோது அவ்வாறு செய்தோம். முன் ஜாக்கிரதையாக இருக்க வேண்டியது அவசியமென்று நாம் கருதிய போதும் சரி, அவ்வாறு இருப்பதற்கு அவகாசமிருந்த போதும் சரி நாம் முன் ஜாக்கிரதையாக இருந்து வந்திருக்கிறோம். துணிவுடன் செயல் புரிந்தால் தான் நம்மைக் காத்துக் கொள்ள முடியுமென்ற நிலை ஏற்பட்டபோது நாம் மிக்க துணிவுடன் செயல் புரிந்திருக்கிறோம்.

ரஷ்யாவின் போக்குவரத்துக்குப் பெரிய ஜீவநாடி போல் விளங்கும் வால்காவையும் ஸ்டாலின்கிராடையும் பிடிப்பதற்காக அவற்றைத் தாக்க ஆரம்பித்தோம். அவற்றை அடைந்து விட்டால், நம்மை எவரும் ஒரு போதும் அங்கிருந்து கிளப்ப முடியாதென்பதை நீங்கள் நிச்சயமாக நம்புங்கள். இப்பெரிய பிரதேசத்தை ஏற்பாடு செய்வது நமது லக்ஷியமாகும்.

நம்மைப் பிளவுபடுத்தக்கூடுமென்று எதிரிகள் நம்புவது வெறும் பைத்தியக்காரத்தனமாகும். ஜெர்மன் பொதுவுடமைக் கட்சியை அடியோடு பைஸல் செய்து விட்டோம். அது இனி ஒருக்காலும் தலை எடுக்காது.

ஜப்பான் யுத்தத்தில் இறங்கி ஹாங்காங், சிங்கப்பூர், ஜாவா சுமத்ரா இவற்றைக் கைப்பற்றியிருக்கிறது. அவர்கள் பெரிய கடற்போர்களை நடத்தியிருக்கின்றனர் கண்ணியம் கௌரவம் இவற்றிற்காகப் போராடுகின்றவர்களும் சேர்ந்துள்ள உலகக் கூட்டுறவை இது காட்டும். நமது சப்மரீன்கள் விமானப்படை ஒத்துழைப்புடன் பெற்று வரும் வெற்றிகள் மாதா மாதம் அதிகரித்து வருகின்றன.

நாம் ஆயுதங்களை விடாமல் செய்துவருவது மட்டுமின்றி எப்போதும் புதிது புதிதான ஆயுதங்களைச் செய்துவருகிறோம். விரோதிகளுக்கு யுத்தத்தை நடத்த இரண்டாம் போர்முனையை ஏற்படுத்துவதைத் தவிர பொதுஜனங்கள்மீது குண்டுகளை வீசும் வழியுமிருக்கிறது. வெடிகுண்டு வீடும் யுத்த முறையைக் கண்டுபிடித்துத் துவக்கியவர் எதிர் காலத்தில் அதி உக்ரமாகக் குண்டு வீசப்படுமென்று தெரிவிக்கிறார்.

நாம் பதிலுக்கு பதில் செய்யும் நேரம் வரும்.

நாம் அடைந்துள்ள வெற்றிகள் மகத்தானவை. இவற்றை அளித்தவர்களை நாம் மறக்கக் கூடாது.''

* * * *

நவயுகப் பிரசுராலயம்

சந்திரமண்டலம்	1	0
மகிழ்ச்சி உதயம்	0	10
ஆனந்தஸாகர்	0	8
வீரவஸந்தா	0	8
நளினசேகரன்	0	8
மூன்று வைரங்கள்	0	8
வத்ஸகுமார்	0	8
படகோட்டி	0	8
மாலதி	0	8
வானொலியும் ஒளிபரப்பும்	2	0
புதுமைப்பித்தன் கதைகள்	2	0
உத்தமசீலன்	1	4
பரிமளகேசவன்	1	4
பிச்சைக்காரக் குடும்பம்	0	8
கருணாலயம்	1	0
சாந்தகுமாரி	1	0

சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை

சீவக சிந்தாமணி-16.



நீங்காத விலங்கு

★

—வ. வேணுகோபாலன்—

எழுதியது

★

சீவகன் காட்டின் நடுவில் விளங்கிய மலையில் ஏறினான். அங்கே உள்ள சிநலயத்தை அடைந்து அருகதேவனை வணங்கித் துதித்தான். பின்னர் மலையை விட்டு இறங்கிக் காட்டைக் கடந்து சென்றான். அங்குத் தடாகங்களையும் சோலையையும் கண்டு நகரம் ஒன்று அருகே உள்ளதென்று எண்ணியவனாய் மேலும் நடந்தான், அப்போது அவனுக்கு எதிரில் ஓர் ஆடவன் புற நகரினின்றும் வந்துகொண்டிருந்தான்.

"ஐய! இந்நாட்டின் பெயரும், நகரத்தின் பெயரும் கூறவேண்டும்" என்று சீவகன் அவனைக் கேட்டான்.

"ஐயனே! நீ இந்தத் திசைக்கே புதியவன்போன்றிருக்கிறாய். இந்நாட்டின் பெயர் மத்திம தேசம். இதோ தெரியும் நகரத்தின் பெயர் ஏமமாபுரம். நீ என்னுடன் வார்த்தையாடினமையால் நமக்குள் நட்பு உண்டாயிற்று. உணவு அருந்திச் செல்ல வேண்டும்" என்றான் அவன்.

"ஐய! நகரிலே சென்றபின்பு பார்க்கிறேன். இப்பொழுது போய் வருகிறேன்" என்று சீவகன் கூறினான். உடனே அவன் விடைபெற்றுச்சென்றான்.

சீவகன் அவ்விடம் விட்டுப் பக்கத்திலிருந்த பொய்கையை அடைந்து அதன் கரையில் உட்கார்ந்தான். பொய்கையில் அன்னங்கள் விளையாடுவதைக் கண்டான். ஆண் அன்னம் தன் பெண் அன்னத்தின் கோபத்தை நீக்கி மகிழ்ந்திருப்பதைப் பார்த்தான். உடன் காந்தருவதத்தையின் எண்ணம் அவனுக்கு உண்டாயிற்று. அவளை நினைத்துப் பலவாறு புலம்பினான். பின்னர் அங்கிருந்தெழுந்து நகரத்தினுள்ளே புகுந்தான். அரண்மனையின் ஓர் பகுதியில் உள்ளதும் பொக்கிஷங்கள் வைக்கப்பட்டதுமான மாளிகையின் பக்கம் சீவகன் நடந்து சென்றான். அந்நாட்டரசன் தடமித்தன் என்பவனுடைய மகன் விஜயன் அவ்வழியே வந்துகொண்டிருந்தான். எதிரில் வந்த சீவகனைக் கண்டதும் விஜயன் துணுக்குற்றான்; 'இந்த நாட்டிலுள்ளவர்கள் இம் மாளிகையின் பக்கத்தில் வரார்; ஆதலால் இவ் வீரன் இந்நாட்டைச் சேர்ந்தவனல்லன்; புதியவன்தான்' என்று தனக்குள் நிச்சயித்தான். உடனே சீவகனுக்கு முன் சென்று, "வீர! நீ எந்த நாட்டைச் சேர்ந்தவன்; உன் ஊரின் பெயர் என்ன? உனக்கு என்ன பெயர்? என்று கேட்டான்.

சீவகன் விஜயன் தோற்றத்தையும் வார்த்தையையும் கேட்டவுடன் அரசிளங்குமரனென்றறிந்தான். உடனே நாட்டின் பெயர், ஊரின் பெயர், தன் பெயர் எல்லாவற்றையும் மறைத்து வேறுவிதமாக மறுமொழி கூறினான். சீவகனுடைய பேச்சையும், தோற்றத்தையும் கண்டு, 'இவனால் நமக்கு மிக்க பயனுண்டு; ஆதலால் எந் தந்தையிடம் இவனை அழைத்துப் போவேன்' என்று நிச்சயித்தான்.

"வீர! இந்நாடும் நகரமும் உன்னுடையவை. எம் மாளிகையும் உனக்குத் தங்குமிடமே! யாங்களெல்லாம் உனக்கு உற்றவினர்" என்று விஜயன் மொழிந்தான். சீவகன், விஜயன் வார்த்தைக்கு உடன்பட்டுப் புன்முறுவலுடன், "மேலும்சொல்ல வேண்டாம்" என்று மொழிந்தான்,

சீவகனை நண்பனாகப் பெற்ற விஜயன் மகிழ்ச்சியுற்றான். பக்கத்தே கனிகள் நிறைந்த மாமரத்தைக்கண்ட விஜயன், ஒரு மாங்கனியைப் பெற வேண்டுமென்று எண்ணினான். உடனே தன் கையிலிருந்த வில்லை எடுத்து வளைத்து ஒரு மாங்கனியின்மீது குறிவைத்து அம்பை எய்தான். விஜயன் எய்த அம்பு குறிதவறிவிட்டது. மாங்கனியைப் பெருமல் விஜயன் ஏமாற்றமடைந்தான். அதைக்கண்ட சீவகன் சிரித்து, விஜயன் கையிலிருந்த வில்லையும் அம்பையும் வாங்கினான். மாங்கனியின்மீது குறி வைத்து ஓர் அம்பை விட்டான். மறுகணத்தில் அம்பும் மாங்கனியும் சேர்ந்தாற்போல் சீவகன் கைகளில் வந்து வீழ்ந்தன. சீவகனுடைய வில்லின் திறமையைக் கண்டு விஜயன் வியப்புற்றான். சீவகன் அம்பெய்த விதத்தையும் அம்பும் மாங்கனியும் ஒருங்கே அவன் கைகளில் வீழ்ந்தமையும் கண்டு ஆச்சரியமடைந்து, "ஐய! நீ வில்லைப்படைத்த கடவுள்" என்று புகழ்ந்தான்.

பின்னர். சீவகனை அழைத்துக் கொண்டு தன் மாளிகைக்குச் சென்றான் விஜயன். உணவு முதலியவற்றால் சீவகனுடைய களைப்பை நீக்கி உபசரித்தான். வழி நடந்த வருத்தம் நீங்கிக் களிப்புடனிருந்த சீவகனைத் தன் தந்தை தடமித்தனிடம் அழைத்துச்சென்று அவன் தன்மைகளையெல்லாம் விளங்கக் கூறினான். தடமித்தன் சீவகனை அன்புடன் உபசரித்து, "வீர! உன் மீது யாங்கள் மிக்க அன்புடையோம்; நீ வில் வித்தையில் நிகரில்லாதவன். இவ்விஜயன் வில் வித்தைக்கு மிகப் புதியவன். இவனல்லாமல் இன்னும் நால்வர் குமரர் உள்ளனர். அவர்கள் கல்வி மாட்சிபெறவில்லை. அவர்களுக்கும் நீ கல்வி கற்றுக் கொடுக்க வேண்டும். இதுவே உன்னை யான் வேண்டுவது" என்று மொழிந்தான்.

சீவகன் அரசனுடைய விருப்பத்திற்கு உடன்பட்டான். அன்று முதல், விஜயன், கதம்பன், கனகன், அசலன், சேனன் என்ற ஐந்து அரசிளங் குமரர்க்கும் சீவகன் கல்வி கற்பித்தான். வில், வாள், வேல் முதலிய ஆயுதப் பயிற்சியையும், யானைப் போர், குதிரைப்போர், தேர்ப்போர், மற்போர் முதலியவற்றையும் பயில்வித்து வந்தான். அரசிளங்குமரர் சீவகன் கட்டளைப் படி கல்வி பயின்றனர்.

* * * *

ஒருநாள் சீவகன் பொழுது போக்கிற்காகத் தனியே சோலைக்குச்சென்றான். அங்கு மலர்ந்திருந்த முல்லை, மல்லிகை முதலிய பூக்களைப்பறித்துப் பலாச்சுளைகளையும் கலந்து ஒரு வகைமாலை கட்டினான். பூக்களாலாகிய ஒரு பந்தையும் செய்தான். ஒரு மலரில் சில எழுத்துக்களை எழுதி பூ மாலையில் அதைச்செருகி வைத்தான். பனிநீரை மாலையில் தெளித்து அலங்கரித்து அதன் அழகைப்பார்த்து உட்கார்ந்திருந்தான். அப்போது அரண்மனையின் அந்தப்புரத்தில் வேலை செய்யும் ஒரு குறளி, சீவகன் வைத்துக்கொண்டிருந்த பூமாலையைப்பார்த்து அவனருகில் வந்தாள்.

"ஐய! இந்த மாலையும் பந்தும் அழகுடையவாயிருக்கின்றன. இவை, எம் அரசன் மகள் கனகமாலைக்குக் கொடுக்கத் தக்கன. அவள் அழகிற்கு இவை அலங்காரமாயிருக்கும்" என்று அந்தக் குறளி மொழிந்தாள்.

"அவ்விதமே கொண்டு போய்க் கொடு" என்று மாலையையும் பந்தையும் சீவகன் தந்தான்.

சீவகனிடம் மாலையையும் பந்தையும் பெற்ற குறளி கனகமாலையிடம் ஓடினாள்.

"கனகமாலை! இவற்றை உன் தமையன்மாருடைய ஆசிரியர் கொடுக்கும்படிக் கூறினார்" என்று மாலையையும் பந்தையும் கனகமாலையிடம் கொடுத்தாள். சீவகனைப் பல முறை கண்டு நினைவில் பதித்து வைத்திருந்த கனகமாலை ஆவலுடன் அவற்றை வாங்கிக் கொண்டாள், ஒரு மலரில் எழுத்துக்கள் இருப்பதைக் கண்டு வியப்புடன் அவற்றைக் கூர்ந்து படித்தாள். 'மகளிர் பலரும் ஆடும் நாடகங்களைக் கண்டு அவருடன் இன்பம் நுகராதவர் வாழும் வாழ்வு முக்கட் பிறப்பிற் பிறந்தும் நன்கு நுகராத வேடரது வாழ்வாயிருக்கும்...' என்று அவனெழுதிய பிறவற்றையும் படித்துச் சீவகன் மீது காதல் கொண்டாள்.

'எனக்கு மிக்க காதலை உண்டாக்கி என் மனத்தைப் பிணித்த அவனை யானும் அவ்விதமே பிணிக்கிறேன்' என்று நிச்சயம் செய்துகொண்டாள். மறுநாள் தன் மார்பிலணிந்திருந்த மாலையை ஒரு செப்பில் வைத்து அதைத் தன் தோழி அனங்கவிலாசினி என்பவளிடம் கொடுத்துச் சீவகனிடம் அனுப்பினாள். அனங்கவிலாசினி ஒருவருமறியாமல் சீவகனிடம் சென்று "இதைக் கனமாலை கொடுத்தாள்" என்று செப்பைக் கொடுத்தாள். சீவகன் அதை வாங்காமல் அனங்கவிலாசினியை உற்றுப் பார்த்தான்.

"ஐய! தாங்கள் கொடுத்த மாலையே கனகமாலைக்குக் காதல் நோயை உண்டாக்கிற்று. அந்நோய்க்கு மருந்து தாங்கள்

தான். தாங்களே அவளுக்கு உயிர். இதை வாங்கிக் கொள்ள வேண்டும்" என்று அனங்கவிலாசினி மொழிந்தாள்.

"நங்காய்! அரசனுடைய ஆதரவில் இருப்பவன் யான். இங்கு வாழ்பவரெல்லாம் ஐம்பொறியையும் அவித்தவர்கள்" என்றான்.

"ஐய! நீர் மிகப் பயந்தவரோ!" என்று அவள் கேட்டாள்,

"இல்லை. ஆசிரியனயுள்ள எனக்கு இது பொருந்துமா?" என்றான் சீவகன்.

"நீர். இம்மாலையைப் பெற்றுக் கொள்ளாவிட்டால், கனகமாலை உயிர் நீங்குவாள்" என்றாள் அவள். சீவகன் புன் முறுவலுடன் மாலையை வாங்கிக் கொண்டான். அனங்க விலாசினி மகிழ்ந்து கனகமாலையிடம் சென்று கூறி அவளை ஆற்றியிருந்தாள்.

* * * *

சீவகன் சில நாட்களில் அரசிளங்குமரர் ஐவரையும் பல கலைகளிலும் வல்லவராக ஆக்கினான். மைந்தர் கல்வி முற்றுப் பெற்றமையைக் கண்ட அரசன், சீவகன் திறமையை மெச்சினான். ஒரு நாள் அரசன் சபையில் வீற்றிருக்கும்போது, சிலரை அழைத்து, "என் மைந்தர்க்குக் கல்வி கற்பித்த வீரன், அரசர் குலமோ, அந்தணர் குலமோ. இரண்டிலொன்று தான். மற்றக் குலத்தினர்க்கு இத்தகைய கல்வித் திறமை உண்டாகாது. ஆதலால் அவனை நீங்காத விலங்கிட்டுச் சிறை செய்கிறேன். இப்பொழுதே அவனைக் கொண்டு வாருங்கள்" என்று கட்டளையிட்டான். உடனே ஏவலாளர் சென்றனர். அரசன் கட்டளையைக் கேட்ட சபையோர், "கல்வியும் கொடிது போலும்" என்று கூறி வருந்தினர். என்ன நிகழுமோ என்று அஞ்சினர்.

ஏவலாளர்களுடன் சீவகன் அரசனிடம் வந்து வணங்கினான். தடமித்தன், சீவகனை மகிழ்ச்சியோடு தன் பக்கத்தே உட்காரச் செய்து, "ஐய! நீ என் மைந்தர்க்குக் கல்வி கற்பித்தாய். அதற்குத் தக்க கைம்மாறு செய்ய வல்லவனல்லேன். என் மகள் கனகமாலையை உனக்கு மணம் செய்து கொடுப்பதே தக்க கைம்மாறு" என்று கூறினான். 'சீவகனுக்கு நீங்காத விலங்கு கனகமாலை தான்' என்று எண்ணிச் சபையோர் மனமகிழ்ந்தனர். சீவகன் மறுமொழி கூறாமல் இருந்தான். தடமித்தன் சீவகன் கையைப் பிடித்துக் கொண்டு, "வீர! 'கலையும் வடிவும் ஒருங்கே உடைய வீரனே கனகமாலைக்குக் கணவன்' என்று சோதிடன் கூறியுள்ளான். அவ்விரண்டும் ஒருங்கே உடையவன் நீயே. உனக்கே கனகமாலை உரியவள்" என்றான். சீவகன் உவகையோடு உடன்பட்டான். நல்ல நாளில் சீவகனுக்கும் கனகமாலைக்கும் மணம் நிகழ்ந்தது. காதலிருவரும் களிப்புடனிருந்தனர்.

* * * *

இராசமாபுரத்தில் சீவகனைக் காணாது வருந்திய தோழர்கள் ஒன்று கூடி ஆலோசித்தனர். "நாம் இனிச் செய்யும் காரியத்தை ஆலோசிக்க வேண்டும்" என்று பதுமுகன் மொழிந்தான்.

"பதுமுகா! கட்டியங்காரனைக் கொன்று ஊரை அழித்து விட்டுச் சீவனைச் சேர்வோம்" என்று புத்திசேனன் சொன்னான்.

"நண்பர்களே! அது தகாது. சீவகன் உள்ள இடத்தை அறிந்து கொண்ட பிறகே கட்டியங்காரனைக் கொல்ல முயற்சிக்க வேண்டும்" என்றான் தேவதத்தன்.

"இல்லை, பகைவரைக்கொன்ற பிறகே துன்பம் நீங்கும்" என்றான் சீதத்தன். பதுமுகன் உடனே எழுந்து நந்தட்டனை நோக்கி "நண்ப! தாய்தந்தையர்க்கு வருத்தம் நீங்கும்படி அவர்களுடன் நீ இருக்க வேண்டும். அவர்கள் இறந்தால் நீர்க்கடனை நீயே செய்ய வேண்டும்" என்றான்.

"பதுமுக! என் கண்ணீரால் எல்லோருக்கும் யான் நீர்க்கடன் செய்து விட்டேன். உயிருடன் இருப்பவர்க்கன்றோ 'நீ தாய் தந்தையரைப் பார்த்துக் கொள்' என்று சொல்ல வேண்டும். யான் உயிர்வாழச் சம்மதியேன். தாமதியாமல் பகைவனைக் கொல்லப் புறப்படுங்கள்" என்று நந்தட்டன் கூறினான்.

உடனே பதுமுகன் முதலியவர்கள் ஆயுதந் தாங்கிப் புறப்பட்டனர்; "சீவகன் வாழ்க" என்று சொல்லி ஆரவாரித்தனர். அப்போது அவ்விடத்தே ஒருவன் பாட்டொன்றைப் பாடினான்.

'தலைவன் வந்து விடுவான். அவனை நினைந்து வருந்த வேண்டாம். அவன் வரும் காலம் இன்னும் வரவில்லை; வருந்த வேண்டாம்' என்னும் கருத்தமைந்த பாட்டைத் தோழர்கள் கேட்டதும் நின்று விட்டனர்.

"நாம் தனித்தனியே சீவகனைப் பல இடங்களிலும் சென்று தேடுவோம். அவனைக் கண்ட பின்பே கட்டியங்காரனைக் கொல்ல வேண்டும். ஆதலால் எல்லோரும் தனித் தனியே பிரிந்து சென்று சீவகனைத் தேடுங்கள்" என்று பதுமுகன் கூறினான். அதை ஒப்புக் கொண்ட எல்லோரும் சீவகனைத் தேடச் சென்றனர்.

அடுத்த வாரம் :—
சீவகனும்
நந்தட்டனும்

சோப் ஸப்ளைகள்

பிரக்யாதி பெற்ற சோப்புகள் விற்பனைக்கு குறைவாயிருக்கிறது என்று உங்களுடைய வியாபாரிகள் சொல்லலாம். இது எப்பொழுதும் உண்மையல்ல. ஆனால் சில சமயங்களில் உள்ளூரில் சரக்குகள் குறைவாயிருக்கலாம்.

பம்பாயிலும் கல்கத்தாவிலும் உள்ள ஆலைகளிலிருந்து சரக்குகள் ரயில் மார்க்கமாய்த்தான் வரவேண்டும். ரயில்வே அதிகாரிகள் ஒவ்வொரு வண்டியையும் இந்தியாவின் பாதுகாப்பிற்காக தகுந்தபடி உபயோகிக்கிறார்கள். ஆகையால் சில சமயங்களில் உங்களுக்கு சோப் கொண்டு வரவும், அல்லது இந்தியாவிலுள்ள வெகு தூரங்களுக்கப்பாலுள்ள இடங்களிலிருந்து ஆலைகளுக்கு வேண்டிய சாமான்கள் கொண்டுவரவும் போதிய அளவு வண்டிகள் அகப்படாமல் இருக்கலாம்.

இந்தியாவின் யுத்த பாதுகாப்பின் பொருட்டு ரயில் வண்டிகள் எப்பொழுதும் தேவை. இந்த உண்மையை நாம எல்லோரும் அறிவோம். முதலில் எதற்கு கொடுக்கவேண்டுமோ அதற்கு கொடுத்துவிட்டும் கூட பொது ஜனங்களின் சௌகரியத்திற்கும், சோப் அனுப்புவதற்கும்கூட ரயில் வண்டிகளை கொடுக்கிறார்கள். ஆகவே ரயில்வே அதிகாரிகளுக்கு மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

நீங்கள் உங்களுக்குப் பிரியமுள்ள சோப் இல்லாமலோ அல்லது, அதிக விலை கொடுத்து வாங்கவோ செய்யாதபடி உங்களுக்கு சோப் அனுப்பவேண்டிய முயற்சிகளை செய்து வருகிறோம். நியாயமான விலைக்கு தேசத்திலுள்ள எல்லா வியாபாரிகளுக்கும் தவறாமல் சரக்கு அனுப்ப ஏதுவாகும் ஒவ்வொரு வழியையும் கைக்கொள்ள உறுதி கூறுகிறோம்.

பொது ஜனங்களின் சௌகரியத்திற்காக
லீவர் பிரதர்ஸ்
(இந்தியா) லிமிடட்
பிரசுரித்தது.

சன்லைட் சோப் — லைப்பாய் சோப் — லக்ஸ் டாய்லெட் சோப் — லைப்பாய் டாய்லெட் சோப் — லக்ஸ் — விம் — மங்கி பிராண்டு.

L. Com. 12-169 TM

டோங்ரேயின்

பாலாமிருதம்

பிரசித்தி பெற்ற

குழந்தைகளின் டானிக்

‘ஷிராஸ்’

★

தி. நா. சுப்ரமண்யம் எழுதியது

★

[அவுரங்கஜேபின் பெயர் சரித்திரப் பிரசித்தம். சரித்திரத்தால் நாம் அறிந்த மன்னன், மதவெறி கொண்டவன்; அவன் தன்னுடைய ஆயுளை இஸ்லாம் மதத்துக்காக அர்ப்பணம் செய்தவன் அதனைப் பரப்புவதற்காக பல நாடுகளின் மீது போர் தொடுத்து வெற்றி கொண்டவன். உலகத்தை வெறுத்து ராஜவாழ்க்கையைத் துறந்து பக்கிரியாகப் போய்விடவேண்டும் என்ற எண்ணத்தையும் ஒரு சமயம் கொண்டிருந்தான் என்றும் கூறுவர்.

அத்தகைய மன்னனது குடும்ப வாழ்க்கையும் பாலைவனம்போல ‘வெறிச்’சென்று இருக்கவில்லை. அவன் உள்ளத்திலும காதல் அரும்பியது அதன் ஸித்திக்காக அவன் எதை வேண்டுமானாலும் செய்யத் தயாராயிருந்தான்.]

“நீங்கள் முகம் ஏன் இப்படி வாடியிருக்கிறது?” அவன் அந்த கேள்விக்குச் சரியான மறுமொழி கூறவில்லை. பதில் பேசாமல் உள்ளே நுழைந்து மேல் அங்கியைக் கழற்றி வீசி யெறிந்தான். ‘தொப்’பென்று மெத்தையின் மீது உட்கார்ந்து, திண்டில் முழங்கையை ஊன்றித் தன் முழுப்பலத்துடன் அதன் மேல் சாய்ந்தான்.

அவன் முகத்தில் எந்தவிதமான குறிப்பும் காணவில்லை. உள்ளக் குறிப்பு வெளியில் தோற்றுதவாறு இருக்கும் அந்த உயர்தர நடிப்பு பிறந்தது முதலே ராஜகரத்தில் அவன் அடைந்த சிட்சையின் பயனாக ஏற்பட்டது. கோபத்தால் மனங் குமுறிக்கொண்டிருக்கும் போதும் புன்சிரிப்புத் தவழக் காட்சி யளிக்கவேண்டும். மனச் சாந்தி குலைந்த விடத்தும், கவலையற்றவன் போலக் காரியங்களைப் பார்த்து நடத்தவேண்டும்.

இரவு வேளை சூரியாஸ்தமனம் ஆகி ஏழெட்டு நாழிகைப் பொழுதாகிவிட்டது. வானத்திலே கீழ்த் திசையில் சந்திரன் உதயமாகிப் பாலபோன்ற தன் நிலவை எரித்துக்கொண்டிருந்தான். மாலைக் காற்று தணிந்துவிடவில்லை. குளிர்ந்த காற்று தோட்டத்துப் பூஞ்செடிகளின் மீது தவழ்ந்து வந்து அறையினுள் நறுமணத்தை வீசியது.

எனினும் அவன் நெற்றியிலே முத்து முத்தாக வேர்வை அரும்பியது. அதை அவன் கை விரலால் துடைத்துக்கொண்டான். அது அவனுக்குக் களைப்பு மேலிட்டுவிட்டது என்பதை எடுத்துக் காட்டியது.

ஹீரா ஒரு வெள்ளை மஸ்லின் துண்டை எடுத்து அவன் நெற்றி வேர்வையைத் துடைத்தாள். பக்கத்தில் இருந்த வெட்டி வேர் விசிறியை எடுத்து மெல்ல விசிறினாள். அந்த ஆனந்தத்தில் மூழ்கிய அவுரங்கஜேப் ‘உச்’ என்று பெருமூச்சு விட்டுக் கண்களை மூடி விச்ராந்தியை அனுபவித்தான்.

சிறிது நேரம் பொறுத்து அவள் விசிறியைக் கீழே வைத்துவிட்டு மெதுவாக எழுந்து உள்ளே சென்றாள். அவுரங்கஜேப் அவளுடைய அன்ன நடையையே கண் கொட்டாமல் பார்த்துப் பருகிக் கிடந்தான். அவன் ஹீராபாயின் மையலில் சொக்கிவிட்டான் என்பதை யாரும் சுலபமாக அறிந்துவிடலாம்.

உள்ளே சென்றவள் அதிக நேரம் தங்கிவிடவில்லை. உடனே திரும்பி வந்துவிட்டாள். அவள் வரும்போது கையில் ஒரு பளிங்குக் கிண்ணத்தைக் கொணர்ந்தாள். அது நிறைய “செக்கச் செவேர்” என்று பானம் நிறைந்திருந்தது. அவள் அவுரங்கஜேபின் பக்கத்தில் வந்து உட்கார்ந்து அந்தக் கிண்ணத்தை அவன் வாயருகில் கொண்டு போய், “இதைக் கொஞ்சம் பருகுங்கள். உங்கள் களைப்பெல்லாம் தீர்ந்து போய்விடும்” என்று கொஞ்சும் மொழியில் சொன்னாள்.

அவுரங்கஜேப் தன் கண்களைத் திறந்து பார்த்தான், அந்தக் கிண்ணத்தைக் கண்டதும் அவன் திடுக்கிட்டுப் போய்விட்டான்.

“என்ன அது?”

“ஒன்றுமில்லை. ஷர்பத்!” என்று சொன்னாள் ஹீராபாய்.

அது முழுப்பொய். அது ஷர்பத் அன்று. பாரசீகத்துத் திராக்ஷைப் பழத்தினின்றும் தயாரித்த உயர்ந்த மதுபானம். அதனை அவன் உடனே அறிந்து கொண்டான். அவன் கண்கள் நெருப்புத்துண்டங்களே போலச் சிவந்தன. கோபத்தணலை அள்ளிக் கொட்டின. மீசை; படபடத்தது.

“சீ, போ அப்பாலே” என்று எரிந்து விழுந்தான். ஆயினும் அவளை அவ்விதம் கோபித்துக் கொள்ள அவன் மனம் பொறுக்குமோ? உடனே தன் குரலை மாற்றிக்கொண்டு, “ஹீரா, உனக்கு இந்த உபதேசம் செய்தவர் யார்?” என்று கேட்டான். அந்தக் குரலில் இரக்கமும், தான் இழைத்த தவறுக்கு மன்னிப்புக் கோரும் வேண்டுகோளும் கலந்து தொனித்தன.

“மதுவாகத்தான், ‘ஷிராஸ்’ ஆகத்தான் இருக்கட்டுமே அதைக்கொஞ்சம் குடித்துப் பாருங்கள். அதனால் எந்தக் கெடுதலும் உண்டாகாது. உங்கள் களைப்பு உடனே நீங்கி விடும். இல்லாவிட்டால் நான் அதை உங்களுக்குக் கொடுப்பேனா?”

அவள் குரலில் சிறிதேனும் தடுமாற்றம் இல்லை: திடமாகத்தான் அவள் அதைச் சொன்னாள். அவளுடைய தோற்றத்திலிருந்து அவள் சிறிதும் அசைந்து கொடுக்கமாட்டாள் என்பதும் எதையும் தன்னிஷ்டப்படியே செய்து முடிப்பவள் என்பதும் விளங்கின.

அவுரங்கஜேபோ மதுபானத்தைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டான். அவர்கள் மதக் கிரந்தமான குர் ஆனில் கண்டபடியே தூய வாழ்க்கையை நடத்துபவன். மொகலாய ஸாம்ராஜ்யத்தின் அதிபதிகளாக இருந்தவர்கள் மதுபானத்தை விலக்கிவிடவில்லை. அவ்வப்பொழுது சாப்பிட்டுத்தான் வந்தார்கள். எனினும் அவுரங்கஜேப் அந்த விதிக்கு விலக்காக இருந்தான். அவன் ஆயுளில் அவன் அதைக் கொஞ்சம் ருசி கூடப் பார்த்ததில்லை.

“சே! ஷைத்தான், என்ன காரியம் செய்யப் பார்க்கிறாய்? மதுபானம் செய்வது மஹா பாபம். இந்த எண்ணத்தை உனக்கு உண்டாக்கியவர் தலையில் கொண்டு போய் அந்தக் கிண்ணத்தைப் போட்டு உடை” என்று வெறுப்புடன் கூறிவிட்டு முகத்தைத் திருப்பிப் படுத்துக் கொண்டான்.

ஹீராபாயிக்கும் கோபம் வந்து விட்டது. என்ன தான் அவள் அடிமையாக இருந்தாலும், அவளை இதற்குமுன் யாரும் அவ்விதம் கோபித்துக் கொண்டதில்லை எல்லோரும் அவளுடன் கொஞ்சிக் குலவி அவள் உள்ளத்தைக் களிப்பிக்கவே முயன்று வந்தனர். அவள் முகம் கோணாமல் எதை விரும்பினாலும் செய்து முடிப்பர். அவ்விதமிருக்க, அவுரங்கஜேப் தன்னைக் கோபித்துக்கொண்டு ‘சைத்தான்’ என்று திட்டியதை அவளால் பொறுக்க முடியவில்லை.

“உம். இப்போது தெரிந்து விட்டது உண்மை, உங்கள் பேச்செல்லாம் இவ்வளவுதான். காரியம் ஆகும் வரையில்! உங்களுக்கு இஷ்டமானபோது தேன் ஒழுகப் பேசுவீர்கள் அப்பால் எதை வேண்டுமானாலும் செய்வீர்கள். நான் ‘சைத்தான்’; அவ்வளவு தானே. சரி, நான் போய் விடுகிறேன்”

ஹீரா ஆத்திரத்துடன் இதைச் சொல்லி விட்டு வெளியே செல்லக் கிளம்பி விட்டாள்.

படுக்கையினின்று சட்டென்று குதித்தெழுந்தான் அவுரங்கஜேப். ஒரே ஓட்டமாக ஓடி அவள் வழியை மறித்து, “ஹீரா, நான் கோபத்தால் தவறிச் சொல்லி விட்டேன், நீ இப்படி வந்து படுக்கையில் வந்து உட்கார்” என்று அழைத்தான்.

ஹீரா அதற்கு அசைந்து கொடுக்கவில்லை. அவள் முகத்தில் தோன்றிய கடுமையும் குறையவில்லை. “வேண்டாம். அடிமையை விட்டு விடுங்கள், போய் விடட்டும்” என்று வேண்டிக் கொண்டாள். ஆனால் அவள் பேச்சு அடிமை சொல்லுவதைப் போல் இல்லை. அதிகாரம் செய்வதாகவே இருந்தது. அதில் கேலிக் குறிப்பும் கலந்திருந்தது.

அவள் தன்னை அடிமை என்று கூறிக்கொண்டது அவுரங்கஜேபின் மயக்கத்தைக் கொஞ்சம் குலைத்தது. புதிய யோசனையைக் கொடுத்தது. ஓர் அடிமை இவ்விதம் பேசுவாளா? ஆனால் அவள் அடிமைதானே. உடனே அவன் தைரியம் கொண்டு, ‘நீ என் அடிமை என்பதை மறந்திருக்க மாட்டாய். நான் உத்தரவு செய்கிறேன், நீ போகக் கூடாதென்று” என்று கர்ஜித்தான்.

ஹீராவோ அதற்கும் கலங்கவில்லை. “ஆம். நான் தங்கள் அடிமைதான். இந்த நாயின் உடல் மீது தங்களுக்குப் பூர்ண அதிகாரம் இருப்பது உண்மைதான். ஆனால் என் உள்ளத்தையும் ஆத்மாவையும் தாங்கள் கட்டுப்படுத்த முடியாது.”

இதைக் கூறிவிட்டு அவள் வேகமாக வெளியே போய் விட்டாள். (தொடரும்)

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி நோய்களை குணப்படுத்துவதில் தாமதமோ, அசட்டையோ செய்வது ஆபத்தாகும். நோய் கண்ட மாத்திரத்தில் 36 வருஷ காலமாக கீர்த்தி பெற்ற இச்சஞ்சீவியை உபயோகியுங்கள்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் அல்லது
ஜம்மி வேங்கட்ரமணய்யா & சன்ஸ்.
1/1, பிராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.
மற்றும்:- பம்பாய், கல்கத்தா, லக்ஷ்மணபுரி, பெங்களூர், திருச்சினாப்பள்ளி.

48, பெரிய தெரு, கும்பகோணம்.

மனமாற்றம்

சிறு கதை

★

வெங்கடேசன் எழுதியது

கமலா தன் அறையில் உட்கார்ந்து கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தாள். மேகங்களும் அவளுடன் கலந்து அத்துக்கத்தைப் பகிர்ந்து கொள்வது போல் இருண்டு சற்றைக்கொரு முறை மின்னியும், இடி இடித்துக் கர்ஜித்தும் கண்ணீரைச் சொரிந்துகொண்டிருந்தன. காற்றும் பேய் போல் கிளம்பி மரம் செடிகளையும், கதவுகளையும் பிய்த்துக்கொண்டு போவதுபோல் வீசிக்கொண்டிருந்தது. அவளுடன் படுக்கை அறை விளக்கு ஒன்று தான் கண் விழித்துக் துணையாக இருந்தது. அறையின் நிசப்தத்தைக் கலக்க சுவற்றில் மாட்டியிருந்த ‘டிங்டாங்’ கடியாரம் தன் பெருத்த தொனியில் ‘டக் டக்’ என்று சப்தித்துக்கொண்டிருந்தது.

கமலா தன் கணவன் செய்த அடாத செயலை எண்ணியே அம்மாதிரி ஏக்கம் கொண்டிருந்தாள். தான் காதலித்து மணந்தவன் என்று அவள் மிகவும் பெருமை பாராட்டி வந்தாள். அவள் கொண்ட கர்வத்திற்கு அளவே இல்லை. தன்னைப் போல் பாக்கியசாலி உலகத்திலேயே இல்லை என்று எண்ணினாள். அவள் எண்ணப்படி கடவுள் சித்தமிருக்குமா? கடவுள் அவள் கர்வத்தைப் பொறுத்துக்கொண்டிருப்பாரா?

மகுடிக்கு முன் கட்டுப்பட்ட சர்ப்பம் போல காதலனுக்குக் கட்டுப்பட்டிருந்தாள் கமலா. அவள் தன் காதலன் மனம் கோணாமல் குடித்தனம் நடத்தி வந்தாள். அவனும் அவள் மனம் நோகாமல் நடந்து வந்தான். தம்பதிகளிடையே சச்சரவு இல்லாமலிருந்தது.

கமலாவுக்குக் கலியாணமான வருஷமே ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தை பிறந்த முகூர்த்தமோ, என்னவோ இருவரிடையேயும் புயல் உற்பத்தியாகியது.

கமலா குழந்தையைக் கவனிப்பதில் ஈடுபட்டதுடன் கணவனையும் பராமரித்தாள். அவள் குழந்தையை அவ்வளவு அன்புடன் சீராட்டுவதைக் கண்டு மகிழ்ச்சி அடைவதற்குப் பதிலாக [illegible] பொறாமை கொண்டான் கோபாலன். குழந்தையின் சிஸ்ருஷையினால் கோபாலனுக்குப் பணிவிடைகள் குந்தகமடைந்தன.

சிறு தவறு தானே பெரிய மனஸ்தாபத்திற்குக் காரணம்? சிறு கற்கள் தானே பெரிய பிரவாகத்தைத் தடுப்பது?

கோபாலனுக்குப் பொறாமைப் பேய் பிடித்துக்கொண்டது. அவனுக்குக் குழந்தையின் மேல் அதிகப் பொறாமை உண்டாகியது. அது பிறந்ததினால் தான், தன் செல்வாக்குக் குறைந்தது என்று எண்ணினான். மனைவியிடம் கோபம் கொண்டான். சிறிய குற்றத்திற்கெல்லாம் சச்சரவு செய்யலானான்.

அன்று அவன் ஆபீஸிலிருந்து வந்த சமயம் காபி தயார் செய்ய சிறிது நேரம் தாமதமாகியது. அது கமலாவின் குற்றமல்ல. குழந்தை ராமுவுக்கு வயிற்று வலி. அவன் வலி பொறுக்க முடியாமல் அழுதுகொண்டிருந்தான். அவனுக்கு மருந்து கொடுத்துச் சமாதானப்படுத்தித் தூங்க வைக்க நேரமாகியது. அந்தச் செயலே கோபாலனுக்கு பெரிய குற்றமாகத் தோன்றியது. அன்று அவனுக்கு ஆபீஸில் அதிக வேலையிருந்ததால் களைப்பு அதிகமாகயிருந்தது. களைப்பின் மிகுதியால் கோபம் வந்தது. கோபத்திற்கு ஏற்ற மாதிரி குற்றமும் ஏற்பட்டது.

அவன் மனதில் வெகு நாட்களாகப் புகைந்துகொண்டிருந்த பொறாமைத் தீ கொழுந்துவிட்டு எரியலாயிற்று. கமலாவைக் கண்டபடி திட்டினான். கோபத்தின் மிகுதியால் அவளை இரண்டு அடியும் அடித்துவிட்டான். அவள் நான் என்ன தப்புச் செய்தேன்? என்று கேட்டது அவன் கோபத்தை அதிகரித்தது. அவன் அம்மாதிரி என்றும் நடந்துகொண்டதுமில்லை. அவளும் எதிர் பேசினதுமில்லை.

கோபாலன் தன் குற்றத்தை எண்ணிப் பாராமல் அவள் ‘நான் என்ன குற்றம் செய்தேன்?’ என்று கேட்டதே பெரிய தவறாக எண்ணி விட்டான். அவன் மேலும் கமலாவை அடித்து ‘உன் தாயார் வீட்டிற்குப்போய்விடு’ என்று கழுத்தைப்பிடித்துத்தள்ளிவிட்டான்.

அவளுக்கு அந்தச் செய்கை மிகவும் மனதைப் புண்படுத்தியது. அவளால் அங்கு ஒரு நிமிஷம்கூட இருக்க முடியவில்லை. சட்டென்று பெண் உள்ளத்தின் வெறுப்பின் காரணமாகத் துணிமணிகளைச் சுருட்டிக்கொண்டு தாயார் வீட்டிற்குப் புறப்பட்டு விட்டாள். புறப்படும் சமயம் குழந்தையைக் கையில் எடுக்கப் போனாள். கோபாலன் கோபம் அதிகரிக்கவே குழந்தையைப் பிடுங்கி தொட்டிலில் போட்டு “போடி குழந்தையை நீ காப்பாற்றினது போதும்—போ-இனிமேல் என் முகத்தில் முழிக்காதே” என்று சொல்லி விட்டான்.

கமலா சென்னையிலேயே திருவல்லிக்கேணியில் உள்ள தன் தாயார் வீட்டிற்குப் போய் விட்டாள். அவள் போன பிறகு கோபாலன் மனம் மிகவும் தடுமாறிற்று. அவன் முதலில் தான் கோபித்துக்கொண்டால் கமலா சட்டென்று அடங்கி விடுவாள் என்று எண்ணினான். அவன் கோபமே அவனைப் படுகுழியில் தள்ளி விட்டது.

கோபாலன் வீட்டில் அவனைத் தவிர வேறு யாரும் இல்லை. சென்னையில் அவனுக்குத் தங்கை ஒருத்தியைத் தவிர வேறு யாரும் பந்துவே கிடையாது. அவளை வரவழைத்துச் சில நாளைக்குத் தங்கும்படி சொன்னான். அவளும் இரண்டுவாரம் வரைதான் அவ்வீட்டில் இருந்தாள், அவளுடைய கணவனுக்கு உடம்பு சரியில்லை என்று அண்ணன் வீட்டிலிருந்து போய் விட்டாள். குழந்தை ராமுவைக் கவனிக்க யாருமில்லை. குழந்தைக்கும் வியாதி அதிகமாகியது. கோபாலன் வேலைக்குப் போவதில்லை. குழந்தையின் பராமரிப்பிலேயே அவன் மனம் ஈடுபட்டிருந்தது. அச்சமயத்தில் கமலாவைத் திருப்பி அழைத்து வர அவன் மனம் இடங்கொடுக்கவில்லை. அவள் வந்தால் குழந்தையைக் கவனிப்பாளேயன்றி தன்னை ஏறெடுத்தும் பார்க்க மாட்டாள் என்று எண்ணினான்.

கமலாவுக்குக் குழந்தையின் உடம்பு விஷயம் எட்டியது. அவள் மனம் நெருப்பில் விழுந்த புழுப்போல துடித்தது. கணவன், ‘முகத்தில் முழிக்காதே’ என்று சொன்ன சொல் அவளை வாட்டியது. அதை நினைத்துக் கொண்டுதான் அப்பொழுது அழுது கொண்டிருந்தாள். அவள் மனம் ஒரு வழியாகப் போகவும் விடவில்லை. கணவனைப் பற்றிய கவலை, குழந்தை ராமுவின் உடம்பைப்பற்றிய துக்கம்—எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து அவளை வருத்தின.

அவள் தன் தகப்பனாரிடம் கணவன் வீட்டிற்குப் போய் குழந்தையை ஒரு முறை பார்த்து விட்டு வருவதாகச் சொன்னாள். கணவன் என்று அவள் சொன்னதும், அவருக்கு அடங்காத கோபமே வந்தது. “அவனைக் கணவன், என்று சொல்லாதே, அவன் நாசமாய்ப் போகட்டும். கூடக்குழந்தையும்—” என்று சொல்லிவிட்டார்.

அவள் மனதில் கணவனை விடக் குழந்தையின் கவனமே அதிகமாகயிருந்தது, தகப்பனோ போகவிடமாட்டேன் என்கிறார்: மனமோ குழந்தை வசமாகயிருந்தது; என்ன செய்வதென்றே அவளுக்குத் தோன்றவில்லை. தகப்பன் பேச்சைத்

(அடுத்த பார்க்க பக்கம்)


காலஞ்சென்ற ஊத்துமலை ஜமீன்தார் ஸ்ரீ S. மருதப்ப பாண்டியன்.

ஊத்துமலை ஜமீன் குடும்பம்

இடது பக்கம் நிற்கிறவர்:—நவநீதகிருஷ்ண ஹிருதாலய மருதப்ப பாண்டியன். இப்பொழுதுள்ள ஊத்துமலை ஜமீன்தார். வலது பக்கம் இருப்பவர்:--தற்பொழுதுள்ள ஜமீன் தாயார். காலஞ்சென்ற S. M. பாண்டியனவர்களின் மனைவியார். மற்றவர்கள் - சகோதரர்கள், சகோதரி.

சுய நலம்

ஓர் மராத்திக் கதை

★

ஸ்ரீ வி. ஸா. காண்டேகர்

எழுதியது

★

பொழுது விடிந்ததும் அதனுடைய மோஹனமான பிரதிபிம்பம் அந்தக் குளத்தின் ஜீவனையே தேஜோமயமாக ஜ்வலிக்கச் செய்யும். காலைநேரத்தின் வாசம் மிகுந்த இளங்காற்று அதன் உள்ளத்தில் இன்ப உணர்ச்சியை ஊட்டும். அதனுடைய உள்ளத்தின் மொட்டுகள் மலர ஆரம்பிக்கும்.

இரண்டு மூன்று மணி நேரத்திற்கெல்லாம் அந்தக் குளத்தின் நீர்மட்டம் முழுதும் தாமரை மலர்களால் நிறைந்துவிடும். அவைகளில் சில மொட்டுக்கள் சிரிப்பதை விட, வெட்கப்படுவதில் தான், அதிக அழகு இருக்கிறதென்ற உண்மையை வெளியிடுவதைப் போல் புன் சிரிப்புடன் பாதி மலர்ந்து-விசித்திரமான சோபையைக் காட்டும்.

கிராமத்திலுள்ள பக்தர்கள் எல்லோரும் தங்கள் இஷ்ட தெய்வத்தை வழிபாடு செய்ய அந்த குளத்திற்கு வருவது வழக்கம். சிலர் இஷ்டப்படி மலரைப் பறித்துச் செல்வார்கள். சிலர் குளத்தில் மலர்ந்திருக்கும் மலரின் அழகைக் கண்டு அதில் லயித்து உட்கார்ந்திருப்பார்கள். அந்த மனோகரமான காட்சிகள் அவர்கள் மனத்தில் புதிய புதிய கற்பனைகளை எழுப்பும். இயற்கைத் தேவி கலையழகு நிறைந்த போர்வையை விரித்திருக்கிறாளோ என்று அவர்களுக்குத் தோன்றும். இலைகளின் மறைவில் மறைந்திருக்கும் பாதி மலர்ந்த மொட்டு, தாயின் மடியிலிருந்து எட்டிப்பார்க்கும் குழந்தையின் முகத்தை நினைப்பூட்டும். அந்த பக்தர்களின் கண்களில் நடமிடும் இந்த கற்பனையைக் கண்டு குளம் மகத்தான ஆனந்தத்தை அடையும். அருகேயுள்ள கோயிலில் பூஜை ஆரம்பமாகும்-நூற்றெட்டு தாமரை மலருள்ள மாலையைக் கடவுளுக்குச் சாற்றி மணியடிக்கும் போது குளம் தன்னுடைய ஜன்மமே சாபல்யமடைந்து விட்டது என்று எண்ணிக் கொள்ளும்.

* * * *

ஒருநாள் குளம் இம்மாதிரி ஆனந்தத்தில் மூழ்கிஇருக்கும்போது ஒரு வாத்து அங்கே வந்தது. குளத்தைப் பார்த்து முகத்தைச் சிணுக்கிக்கொண்டது.

குளம்ஆச்சரியத்துடன் அதன் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தது.

வாத்து முகத்தை சிணுக்கிக் கொண்டே "சீச்சீ! சீ! இவ்வளவு மோசமான ஜலம்! மூக்கினால் தொடக்கூட மனம் கூசுகிறதே!" என்றது.

தாமரை மலர் பறிக்க வருகிறவர்களின் கால் மண்ணினால் தான் தன் தண்ணீர் அழுக்கடைந்து விட்டது என்ற விஷயம் குளத்திற்கு விளங்கியது.

வாத்து கம்பீரத்துடன் "நான் எத்தனையோ நதிகளைப் பார்த்திருக்கிறேன். சமுத்திரத்தைக் கூடப் பார்த்திருக்கிறேன். ஆனால் இந்த மாதிரி அழுக்குத் தண்ணீர், ராம! ராமா! நான் எங்குமே கண்டதில்லை. அவைகளெல்லாம் கங்கையின் நீரைப் போல்-ஸ்படிகத்தை போல்—துல்லியமாக இருக்கின்றன!" என்று கூறித் தண்ணீரில் மூக்கை நனைத்து அதன் நாற்றத்தினால் மயிர்க்கூச்செறிந்ததைப் போல் நடித்தது.

குளம் அதை அழைத்து "என்னுடைய தவறு எனக்குத் தெரிந்து விட்டது. நண்பா! நாலு தினங்கள் பொறு. பிறகு பார் என் ஜலம் கங்கா ஜலம் போல் இருக்கிறதா இல்லையா என்பதை!" என்றது.

* * * *

தாமரை மலர் பறிக்கவந்த ஒவ்வொருவரிடமும் குளம் தன்னுடைய சேற்றை எடுத்துத் தூர எறியுமாறு வற்புறுத்த ஆரம்பித்தது. பலர் சமாதானம் சொன்னார்கள். ஆனால் அது கேட்கவில்லை. பல வருஷங்களாக பூஜைக்கு மலர் தந்த நன்றியை மனத்தில் கொண்டு ஒரு பக்தன் சேற்றையெல்லாம் வாரி வெளியே எறிந்தான்.

* * * *

இப்பொழுது குளத்தில் மருந்துக்குக் கூடத் துளிச் சேறு கிடையாது. என் ஜலம் இப்பொழுது கங்கா ஜலம் போல் இருக்கிறதென்று குளம் பெருமை கொண்டது. ஆனால் சீக்கிரத்திலேயே தாமரைக் கொடிகள் யாவும் வாடி உலர்ந்து விட்டன. ஒரு மலரைக் கூடக் காணவில்லை.

குளத்துக்குத் தன் வாழ்க்கையே ரஸ மற்றதைப் போல் ஆகிவிட்டது.

ஆனால் கழுத்து வரை அலகை விட்டு மீன்களைக் கொத்திக் கொண்டே, "ஆஹா! எப்படிப்பட்ட நிர்மலமான ஜலம்! கங்கா ஜலத்தைப் போல இருக்கிறது" என்றது வாத்து.

"கண்ணன்"
மொழிபெயர்ப்பு

மனமாற்றம்

(முன் பக்கத்தொடர்ச்சி)

தள்ளி விட்டுப் போனால் அரசனை நம்பி புருஷனைக் கைவிட்ட கதையாக முடிந்து விட்டால் என்ன செய்வதென்ற கவலை வேறு. அந்நிலையில் அவள் கண்ணீர் விடுவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?

இரவு வெகு நேரமாகியது. கடிகாரத்தில்இரண்டுமணி அடித்தது. பாராக்காரர்கள் தடியைத் தரையில் தட்டிய வண்ணம் "ஓய்" என்று கூச்சலும் போட்டுக் கொண்டிருந்தார்கள். சில நாய்கள் விகாரமாகக் குரைத்தன. அசட்டுக்குக் காக்கைகள் நிலவைக் கண்டு பொழுது விடிந்து விட்டது என்று எண்ணி "காகா" என்று கரைந்தன. எங்கோ ஒரு ஜாமக் கோழி "கொக்கர கோ" என்று கூவிற்று. இதைத் தவிர வேறு 'மனித நடமாட்டமே நகரில் இல்லை.

கமலாவிற்குத் தூக்கமே வரவில்லை. அவள் மனதில் குழந்தை ராமுவின் முகமே தென்பட்டது: அவள் அடிக்கொருமுறை பெருமூச்சுவிட்டு ஏதோ யோசித்துக்கொண்டிருந்தாள்.

கடைசியில் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவள்போல எழுந்து நின்றாள். அம்மாதிரி நான்கு ஐந்து முறை செய்தாள். அவள் மனம் தடுமாறிக்கொண்டிருந்தது. 'தகப்பனா—பிள்ளையா' என்ற கேள்வியே அவள் மனதில் எழுந்துகொண்டிருந்தது. 'தகப்பனும் வேண்டும்தான். பிள்ளையும் வேண்டும்தான். இதில் எது முக்கியம்?' என்று அவள் யோசிக்க அதிக நேரம் பிடித்தது. கடைசியாக 'தகப்பனுக்குத் தற்பொழுது உடம்புக்கு ஒன்றுமில்லை. பிள்ளைக்குத்தான் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. அதனால் பிள்ளையைத் தான் முதலில் பார்க்கவேண்டும். அதற்காக என்ன கஷ்டம் வந்தாலும் பாதகமில்லை' என்று தீர்மானித்துக் கொண்டாள்.

சட்டென்று ஸோபாவை விட்டு எழுந்தாள். துப்பட்டியை எடுத்து உடம்பை மூடிக்கொண்டாள். அறையின் கதவை மெதுவாகத் திறந்து, அங்கு மிங்குமாகப் பார்த்தவண்ணம், வாசல் கதவருகில் வந்தாள். சற்று நின்று ஏதோ யோசித்தாள். பிறகு கதவைத்திறந்துகொண்டு வெளியே வந்தாள். வாசலில் காவல்காரன் படுத்துக்கொண்டிருந்தாள். அவன் காடாந்தகாரமாகத் தூங்கிக்கொண்டிருந்தான். அவனை மெதுவாகத் தட்டி எழுப்பினாள். அவன் அலறி அடித்துக்கொண்டு எழுந்தான். சின்ன எஜமானியைக் கண்டு மிரண்டு எழுந்து நின்றான். அவன் காதோடு 'என்னுடன் வா' என்று சொன்னாள். அவனும் பதில் பேசாமல் பின் தொடர்ந்தான். திருவல்விக்கேணியைவிட்டு சமுத்திரக்கரையோரமாகவே நடந்து மயிலாப்பூரில் உள்ள தன் கணவன் வீட் அடைந்தார்கள்.

கதவைத் தட்ட எண்ணி கதவருகில் கமலா சென்றாள். ஆனால் கதவு தாளிடப்படவில்லை. கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றாள். வேலைக்காரனும் பின் தொடர்ந்தான். ஹாலில் கட்டிலின் மேல் குழந்தை ராமு 'அம்மா, அம்மா' என்று பிதற்றிக் கொண்டிருந்தான். கோபாலன் அருகில் நாற்காலியில் உட்கார்ந்து அவனுக்குச் சமாதானம் சொல்லிக் கொண்டிருந்தான். விளக்கின் ஒளியில் அவன் முகம் நன்றாகத் தெரிந்தது. அவன் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாகப் பெருகிக் கொண்டிருந்தது. கமலா வந்தது கூட அவனுக்குத் தெரியவில்லை.

கமலாவுக்கு அவ்வளவு தூரம் வரும் வரையில் இருந்த தைரியம் அச்சமயம் சிறிது விலகியது. கணவன் முன் எப்படிப் போவது என்ற எண்ணமே அவளை அப்படிச் செய்தது. குழந்தை தன்னைக் கூப்பிடுவதைக் கேட்ட பிறகு அவளால் அப்படி வெகு நேரம் நிற்க முடியவில்லை. சட்டென்று கட்டிலருகில் வந்து "ராமு" என்றாள்.

கோபாலன் திடுக்கிட்டான். அவன் கண்களை அவனால் நம்ப முடியவில்லை. அந்த நள்ளிரவில் அவள் வருவாள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. கமலாவைக் கண்டதும் கோபமும் பொறுமையும் பறந்தோடின. அவன் அன்று கமலாவை அழைத்து வர எண்ணியிருந்தான். ஆனால் அவன் செய்த அடாத செயல் அவனைத் தடுத்தது. அவன் மனதை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை. கமலாவே விஷயம் தெரிந்து வருவாள் என்று தான் எதிர் பார்த்தான்.

கமலா வந்ததைக் குறித்து அவனுக்கு வெட்க மேற்பட்டதே ஒழிய பொறுமையோ கோபமோ சிறிதும் உண்டாகவில்லை. வெட்கத்தால் சட்டென்று எழுந்து ஒரு மூலையில் போய் நின்று விட்டான். கமலா குழந்தையை வாரியெடுத்து மார்புடன் அணைத்துக் கொண்டதைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் உதிர்த்தான். அவன் செய்த அடாத செயலை எண்ணி மனதிற்குள் தன்னை நொந்து கொண்டான்.

நவநாகரீகம்

★

ஒரு புடவை!

★

காசினி எழுதியது

* * * 'இது என்ன? புது தினுசுப் புடவையா? ஒரு நிமிஷத்துக்கு வாஸ்தவத்திலேயே ஒரு 'பெட்-ஸ்பெரட்டைக் கட்டிக்கொண்டு வந்துவிட்டயாக்கும் என்றே எண்ணினேன்!' என்று உள்ளே பிரவேசித்த ரஞ்ஜினியைப் பார்த்து நளினாதேவி சொன்னாள்.

'அது என்ன புது பாஷனா? 'பெட்-ஸ்பெரட்' என்றால் தெரியலையே?' என்று பங்கஜத்தின் மாமியார் கேட்டாள்.

'இது தெரியாதா உங்களுக்கு? அதுதான் படிக்கையின் மேலே போட்டு வைக்கிறாளே, அந்த விரிப்பு!' என்று என்னுடைய அத்தை சொன்னாள்

'துப்பட்டியா? இது லுங்கி பாஷனாட்டம் இல்லையே?' என்று பங்கஜத்தின் மாமியார் ஆக்ஷேபித்தாள்.

'துப்பட்டி இல்லே; இந்த நாளிலே, காலையிலே எழுந்தும் படுக்கையை லக்ஷணமாக, உதறிச் சுருட்டி வைப்பது பாஷன் இல்லே. அதைச் சுருக்கங்கள் இல்லாமல் விரித்து, இப்படி அழகான கட்டங்கள் போட்டு அல்லது, பூ வேலைகள் செய்திருக்கும் கனமான துணி ஒன்னை மேலே போட்டு வைக்கணம்; இது தான் நாகரீகம்! படுக்கும்போது இதை எடுத்து விட்டு படுத்துக் கொள்ளணம்' என்றாள் என் அத்தை.

'எதுக்காக அப்படிச் செய்யணம்? படுக்கையை விரித்தே வைச்சால் தூசி, தும்பு விழாதோ?' என்றாள் பங்கஜத்தின் மாமியார்.

'எதுக்காகவா? அதுதான் பாஷன்; இதுக்காகத்தான். தூசி தும்பு உள்ளே விழாமல் பார்க்க அழகாக இருக்கத்தான் பெட்ஸ்ஸ்பெரட் சுமாருக்கு ரஞ்ஜினி புடவை மாதிரியில் இருக்கும்! பார்த்துக்கொள்ளுங்களேன்!' என்றாள் என் அத்தை.

'முதலிலே பார்க்க ஒரு தினுசாக இருந்தது! இப்போ கிட்டப் பார்க்கிற போது நன்னாத் தான் இருக்கு!' என்றாள் நளினா தேவி.

ரஞ்ஜினி உடுத்தி இருந்த புடவை அஞ்சுருவி இனத்தைச் சேர்ந்தது. இதில் ஒரு தினுசான மஞ்சள் கலந்த சிகப்பு நிறம், பச்சை நிறத்தைவிட அதிகமாக எடுத்துக் காட்டிற்று. சிறிய சிறிய சதுரங்கள்; இவைகள் கனமாகப் புடவையின் மேல் தூக்கி நிற்பது போல தோற்றம் அளித்தது. முதல் பார்வைக்குப் புடவை வெல்வட் மாதிரியில் கனமாக இருக்கும் என்றே தோன்றும், அருகில் பார்த்தால் தான் இது இந்தக் கட்டான்களால் ஏற்பட்ட தோற்றம், புடவை சாதாரணப் பட்டுப் புடவை கனம் தான் என்பது விளங்கும், ரிப்பன் கரை; இதில் சரிகை நெளி; முக்கால் முழ அரக்குத் தலைப்பு. புடவை ஆறு கஜம்தான். விலை முப்பத்திஐந்து ரூபாய்கள் ஆச்சு என்று ரஞ்ஜினி சொன்னாள், புதிய தினுசாக, நேர்த்தியாக இருந்தது.

தித்திப்பு பக்ஷணம்

'உங்கள் ஊரிலே சக்கரை கிடைப்பது ரொம்பவும் சிரம்மாக இருக்காமே? நீங்கள் நினைத்தபோதெல்லாம், சர்க்கரையும், நெய்யையும் கொட்டி பக்ஷணம் பண்ணுவீர்களே? இப்போ என்ன செய்கிறீர்கள்?' என்று நீ கேட்டிருக்கிறாய்.

ஆலையில்லா ஊருக்கு இலுப்பப்பூச் சக்கரை என்று ஒரு வசனம் நீ கேட்டிருக்கிறாய் இல்லையா? கூடியவரையில் அஸ்கா சக்கரைக்கு பதில் பூரா, வெல்லம் இவைகளை உபயோகிக்கிறோம். பூராச் சக்கரை அஸ்காவைவிட ஒரு பங்கு விலை அதிகம். வெல்லமும் கிடைக்கிறது என்பதைத் தவிர, விலை என்னமோ ரொம்பவும் ஜாஸ்திதான். என்ன செய்யலாம்?; இருப்பதை வைச்சுத்தானே பண்ணணம்.

அன்று லேடி சுந்திராசாரி வீட்டில் வெலலம்போட்டுகாரட் ஹல்வா பண்ணி இருந்தாள். வீட்டில் மாடு கறப்பதால் இவர்களுக்குப் பால் கஷ்டம் கிடையாது. பால் கோவா ஒரு பங்கு, வெந்த காரட் துருவல் ஒரு பங்கு, வெல்லம் ஒரு பங்கு என்று செய்திருந்தாள். குங்குமப்பூ. ஏலக்காய் எல்லாம்கொஞ்சம் தூக்காகவே போட்டு,முறுகவிடாமல் பக்குவமாகச் செய்திருந்ததில். சக்கரை போடாத வித்தியாசம் அதிகம் தெரியவில்லை, நன்றாகவே இருந்தது, மற்றைய விவரங்கள் அடுத்த கடிதத்தில்.......

படையெடுப்பை சமாளிக்க

டில்லியில் இருக்கும் ஸ்திரீகள் தற்காப்பு முறையிலும் எதிரிகளது அக்ரமத்தை சமாளிப்பதிலும் பயிற்சி பெற்று வருகின்றனர். தடியெடுத்துக்கொண்டு எதிரியை வெருட்ட அவர்கள் தயாராகின்றனர்.

மதுரை ஸ்ரீ கு. வ. ச. வன்னியப் பெருமாள் செட்டியார் காலமானார்.

மதுரை நகர் பிரபலவியாபாரியும் ஜெனரல் மர்ச்செண்டும் கமிஷன் ஏஜண்டும்,தேசாபிமானியுமான ஸ்ரீ கு. வ. ச. வன்னியப் பெருமாள் செட்டியார் தமது 52-வது வயதில் சென்ற 2—9—42-ந் தேதி மதுரை கிருஷ்ணாயர் தெப்பக்குளத் தெருவிலுள்ள தமது இல்லத்தில் காலமானார்.

தர்மிஷ்டராகவுள்ள ஸ்ரீ செட்டியார் மதுரை ஸ்ரீ சந்தான கிருஷ்ணன் கோயில் திருப்பணிக்காக ஆயிரக்கணக்காக பணம் கொடுத்து அதன் டிரஸ்டியாயுமிருந்து வந்திருக்கிறார். மேற்படி கோயில் தர்மத்தையும் நடத்திவந்துள்ளார். இப்பொழுதும் மேற்படி தாமம் ஸ்ரீ செட்டியார் பெயரால் நடந்து வருகிறது. ஸ்ரீ செட்டியார்தமது மனைவி, இருமக்களான ஆண்,பெண் மக்கள் அவரது சகோதரர்கள் ஸ்ரீ வி.கே. சோம செட்டியார், ஸ்ரீ வி. கே. ராமய்யா செட்டியார், (மதுரை கௌரவ பெஞ்சு மாஜிஸ்திரேட், சிவசா ரோணமெண்டு கிளப் போஷகர், ரெட்கிராஸ் சொஸைடி மெம்பர்) மற்றும் திரளான பந்து மித்திரர்களையும் விட்டு விண்ணுலகடைந்தார்.

ஸ்ரீ செட்டியாரது பிரிவு முக்கியமாய் மதுரை வணிக வைசிய சமூகத்திற்கே பெரும் நஷ்டமாகும்.

இப்பெரியாரது ஆத்மா இறைவன் திருவடி நிழலில் சாந்தியடைவதாக!

வாரா வாரம் உங்கள் கேசத்தைச் சீர்படுத்தும் முறைகள்
ஆடவர்களே, நீங்கள் அறியவேண்டிய முக்கியமான ஒரு விஷயம்

1 டாம்கோ தேங்கா யெண்ணெய் ஷாம்பூ ஒருபுட்டி வாங்கவும். (விலை சொற்பம் தான் - இன்றே வாங்குங்கள்.)

2 கூந்தலை (ஜலத்தில்) நனையுங்கள்.

3 ஷாம்பூவை தாராளமாக உபயோகித்து நிறைய நுரை வருமளவு தேய்க்கவும். பிறகு சுத்த ஜலம் விட்டு கூந்தலை அலசி உலர்த்துங்கள்.



4 சீப்பும் பிரஷ்ஷும் கொண்டு வாரி மினுக்கவும். இப்பொழுது உங்கள் கூந்தலின் அழகிய தோற்றத்தைக் கண்டு நீங்களே வியப்புறுவீர்கள்.

டாம்கோ தேங்காயெண்ணெய் ஷாம்பூ உங்கள் கேசத்தை மிருதுவாகவும்,உறுதியாகவும், பளபளப்பாகவும் இருக்கச் செய்கிறது. எப்பொழுதும் அதையே உபயோகியுங்கள். எல்லா பிரபல கடைகளிலும் கிடைக்கும்.

டாம்கோ தேங்கா யெண்ணெய் ஷாம்பூ

A TATA PRODUCT

டாம்கோ விற்பனை இலாகா,
1, வாரன் ரோட் பீமன்பேட், மைலாப்பூர், மதராஸ்.

தயாரிப்போர் :-
தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமி., டாடாபுரம் & பம்பாய்.

T. H. 2363

WHY SUFFER? PLEASE TAKE
Dr. PAUL'S VIM PILLS
The Great Scientific Medicine for Nervous Debility, Sexual Weakness, Loss of Power, Heart Palpitation, Diabetes, Gout, Rheumatism, Constipation etc., etc.,
Act like Magic, Purify Blood and Strengthen Nerves and increase Strength.
Rs. 2-8 per Phial of 30 pills Appah & Co., 16, Taylors Road, Kilpauk, Madras.

அட்டைப் படம்

★

"அட்ஞகார்" என்ற உன்னத ஹிந்தி படத்தில் சிறப்பாக நடித்திருக்கும் பிரபல நடிகை சாந்தா ஆப்தே.

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

நௌகா சரித்திரம்
14-வது கீர்த்தனம்

I

பல்லவி

பெருகு பாலு புஜியிஞ்சி தனுவுனு
பெஞ்சின தெல்லதிந்துகா
நிரவதி ஸுகதாயக மா வயஸு
நீடனு கலிபேடந்து கா

சரணம்

1. அத்த மாமலதோ நீகை மே மெது—
ராடின தெல்ல யிந்துகா
ஸத்தகலிகி யிகனேனு யுந்துமனி
ஸந்தஸில்லின திந்து கா

2. ஆஸதீரநீ ஸேவவல யுனனி
யலஸின தெல்லனிந்து கா
பாஸி யுண்டனே ரக பெத்த லசே
பாமுல ஜெந்தின திந்து கா

3. ஸ்நான பானமுலு ஸேயு வேளநினு
தியானமு ஜேஸின திந்து கா
மேனுல நீஸொம் முலுஸே யுடகை
மேமல் லாடின திந்து கா

4. தலிரு போனு லேயமுன நதிலோ
சுல்லடி ல்லேதி இந்து கா
வலசுசு தொலிஜன் மமுரா முனிசே
வரமுலு படஸின திந்து கா

5. கோடி ஜன்மமுலு தபமுலு சேஸி
கோரின தெல்லனிந்து கா
ஸாடிலேனிநீ லீலலு மனஸுன
ஸைரிஞ்சி யுன்ன திந்து கா

6. ஆகம நிகமபு ராணு சாருடனி
அனு ஸரிஞ்சின திந்து கா
தியாக ராஜனுத! தாரக நாம! நீ
தத்வமு தெலிஸின திந்து கா

II

நிரவதிஸுகதாயக!—எல்லையற்ற சௌக்யத்தைக் கொடுத்தருளும் ஏ கிருஷ்ண
பெருகுபாலு புஜியஞ்ஜி!—தயிர் பால் முதலானவைகளை உட்கொண்டு
தனுவுனு பெஞ்சினதெல்லாது—உன்திருமேனியை வளர்த்ததெல்லாம்
இந்துக—இதற்குத்தான
மாவயஸு—எங்களுடைய யௌவன பருவம்
நீடனு கலிபேடந்துகா—ஜலத்தில் முழ்கிப் போவதற்குத்தான ஏற்பட்டுள்ளது.
அத்த மாமலதோ—அத்தை மாமன் முதலானவர்களிடத்தில்
நீகை—உன்பொருட்டு
மேமு எதிருடினதல்ற—நாங்கள் எதிர்த்துப் பேசி அவர்களை விரோதித்துக் கொண்டதெல்லாம்
இந்துகா—இதற்குத்தான
ஸத்தகலிகி—நல்லொழுக்கமடைந்து
இகனேன இந்துமுஅனி—இனியாவது இருப்போம் என்று
ஸந்தஸில்லினதி இந்துகா—நாங்கள் ஸந்தோஷம் கொண்டது இதற்குத்தான
ஆஸதீர—ஆவல்தீர
நீஸேவவலயு னுஅனி—உன்தரிசனம் கிடைக்கவேண்டும் என்று
அலஸின தெல்லனு இந்துகா—நாங்கள் கஷ்டப்பட்டதெல்லாம் இதற்குத்தான
பாஸியுண்டநேரக—உன்னைபிரிந்திருக்கமுடியாமல்
பெத்தலசே—வீட்டிலுள்ள பெரியோர்களால்
பாமுலஜெந்தினதி—நாங்கள் கஷ்டம் அடைந்தது
இந்துகா—இதற்குத்தான
ஸ்னனபானமுலு ஸேயுவேள—நீராடும்போதும் சாப்பிடும்போதும் இன்னும் எல்லாக்காலங்களிலும்
நினுதியானம் ஜேஸினதிந்துகா—நாங்கள் சதா உன்னையே தியானம் செய்துக்கொண்டிருந்தது இதற்குத்தான
மேனுல—எங்கள் சரீரங்களை
நீ ஸொம்முலுஸேயுடகை—உனக்கே ஆபரணம் போன்று அர்ப்பணம் செய்ய
மேமு அல்லாடினதிந்துகா—நாங்கள் அலைந்து திரிந்தது இதற்குத்தான
தலிருபோனுலே—யௌவன ஸ்திரீகளான நாங்கள்.
யமுன நதிலோ—யமுன நதியின் மத்தியில்
தல்லடில்லேதி—தட்டுத்தடுமாற (அவதிப்பட)
இந்துகா—(நாங்கள் பிறந்தது இதற்கா)
தொலிஜன்மமு—முன் ஜன்மத்தில்
வலசுசு—(மோகம் கொண்டு) விரும்பி
ராமுனிசே—ஸ்ரீராமசந்திரமூர்த்தியால்
வரமுலு படசின திந்துகா—வரம் பெற்றதெல்லாம் இதற்குத்தான.
கோடி ஜென்மமுலு—அநேகப் பிறவிகளில்
தபமுஜேஸி—கொடிய தவம் செய்து
கோரினதல்ல திந்துகா—பகவானைப் பிரார்த்தித்ததெல்லாம் இதற்குத்தான.
ஸாடிலேனி—இணையற்ற
நீ லீலலு—உன் துஷ்டத்தனமான விளையாட்டுகளை
மனஸுன ஸைரிஞ்சியுன்னதி—மனதார சகித்துக்கொண்டு இருந்தது.
இந்துகா—இதற்குத்தான.
ஆகம நிகம புராண ஆசாருடு அனி—வேதாகமங்களால் அறியப்படும் புராண புருஷோத்தமனென்று அறிந்து
அனுஸரிஞ்சின திந்துகா—உன்னை நாங்கள் பின்பற்றினது இதற்குத்தான.
தியாகராஜனுத—தியாகராஜனால் துதிக்கப்பட்டவனே!
தாரக நாம—'ராமா' என்ற தாரக மந்தரத்தை பெயராகக் கொண்டவனே!

நீ தத்வமு தெலிஸின திந்துகா—உன் உண்மை ஸ்வரூபத்தை அறிந்து நாங்கள் உன்னை பஜனம் செய்து வந்தது இதற்குத்தான.

III

முன் கதைச் சுருக்கம்:—

ஒரு சமயம் கோபியர்கள் கண்ணனுடன் ஓடத்திலேறி யமுனையில் உல்லாஸமாகப் பொழுது போக்கினர். ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி தங்கள் வசப்பட்டுவிட்டதாக, கர்வம் கொண்டு பேசிய கோபியர்களை நல்ல வழி திருத்த கண்ணன் இடிமழையை உண்டாக்கியதோடன்றி ஓடத்திலும் ஒரு த்வாரமுண்டாக்கி தண்ணீர் உட்புகும்படிச் செய்தார். இதனால் பயமடைந்த கோபியர்கள் தங்கள் கர்வத்தை யெல்லாம் ஒழித்து கண்ணனை அவ்வாபத்தினின்று எவ்விதத்திலாவது காப்பாற்றி விடுமாறு யமுனதேவியை வேண்டிக் கொண்டார்கள்.

பெருகு பாலு:—இது நௌகா சரித்தின் 14-வது கீர்த்தனம் கண்ணன் தங்களுடன் ஆபத்தில் அகப்பட்டுத் தவிப்பதைக் கண்டு வருத்தங் கொண்ட கோபியர்கள் தங்கள் வாழ்வினைப் பயனை நினைத்து புலப்புவது இக்கீர்த்தனத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

அத்தமாமலதோ:—கோபியர்கள் கண்ணனின் சமீபத்தையடைந்து நித்யானந்தத்தைப் பெருவதற்காக தங்கள் பெற்றோர்களோடும் மாமன் மாமி முதலானவர்களோடும் விரோதித்துக் கொள்வதையும் பொருட்படுத்தாமலிருந்ததைக் குறிப்பிட்டுச் சொல்லுகிறார்.

வலசுசுதொலி:—தண்டகாரண்யவாசிகளான மகரிஷிகள் ஸ்ரீ ராமனுடைய ஸ்வரூபத்தில் ஈடுபட்டு மெய்மறந்து நிற்க, அதனை யறிந்த ரகுவீரன் அவர்களுடைய ஆவலை தனது அடுத்த அவதாரத்தில் தீர்த்துவைப்பதாய் வாக்குறுதி கொடுத்ததாகவும், அவ்வண்ணமே அம்மகரிஷிகள் கோபிகைகளாகப் பிறந்து கண்ணனுடன் சேர்ந்து இன்பமடைந்தனர் என்ற ஓர் புராணந்தர கதையை இஃது ஞாபகமூட்டுகிறது.

—(அடுத்த பக்கம் பார்க்க)

கண்ணன் கோலம்

"தமிழன்" எழுதியது

கண்ணன் பிறந்து மற்றொரு மாதம் ஆயிற்று. கண்ணனுக்கு மாதத்திருவிழாக் கொண்டாடும் அசோதை, குழந்தையை வாரியெடுத்து அணைத்துக்கொண்டு, "கண்ணா! இன்று நீ பிறந்த திரு நல் நாள், நன்று நீராடவேண்டும்" என்றாள். கண்ணனை வளர்க்கும் தாதி அங்கே வந்து, "கண்ணா! பேய்ச்சி முலையுண்ணக் கண்டும், என் நெஞ்சம் நில்லாது, நான் உனக்கு முலை தந்தேன். இப்போது காய்ச்சின நீரோடு நெல்லியைக் கடாரத்திலே பூரித்து வைத்திருக்கிறேன். வாய்த்த புகழ்மணிவண்ணா! மஞ்சனமாட நீ வராய்" என்று அசோதையிடமிருந்து குழந்தையை வாங்கிச் சென்று திருமஞ்சனமாட்டினாள்.

திருமஞ்சனமான பின்பு, அசோதைப் பிராட்டியானவள் கண்ணனைச் சிங்காரித்து கண்ணனுக்கென்று இருபுறங்களிலும் பெரிய சக்கிரங்களையுடையதான அழகிய வண்டித் தொட்டிலிலே படுக்கவிட்டாள். படுக்க வைத்து,

"ஆலை நீள் கரும்பன்னவன் தாலோ!
அம்புயத்தடங்கண்ணினன் தாலோ!
வேலை நீர் நிறத்தன்னவன் தாலோ!
வேழப்போதகம் மன்னவன் தாலோ!"

என்று தாலாட்டினாள்.

கண்ணன் கண்களைப் பிசைந்து கொட்டாவி கொண்டான். அதைக் கண்ட அசோதை தாதியைக் கூப்பிட்டு, "அஞ்சனமெழுதிய செம்மலர்க் கண்களாலே தொட்டில் மேற் கட்டியை நோக்கியவண்ணமே கண்ணன் கண்ணயர்ந்துவிட்டான். தன் சிறு சேவடிகளை முடக்கியும், சிறு விரல்களை அங்கையோடு அணைத்தும், ஆனைக்கன்றைப்போல இவன் கிடக்கும் அழகைப் பார்த்துக்கொண்டே, இருக்க வேண்டுமென்று ஆசைதான். ஆனாலும் வீட்டுக் காரியமெல்லாம் அப்படியே கிடக்கிறது. சற்று குழந்தையைப் பார்த்துக்கொள். இதோ எல்லாவற்றையும் முடித்துக்கொண்டு வந்துவிடுகிறேன்" என்று, தாதியைக் குழந்தைக்குக் காவலாக வைத்துவிட்டு வீட்டிற்குள்ளே போனாள். தாதியும் சற்று நேரம் தொட்டிலை ஆட்டிவிட்டு, சிறிது கண்ணயர்ந்தாள்; பிறகு, திடீரென்று குழந்தை வீறிட்டு அழுவதைக் கேட்டுத் திடுக்கிட்டு விழித்துக்கொண்டாள். வண்டித் தொட்டில் மெதுவாக அசைந்துகொண்டிருந்தது. சக்கிரங்கள் இரண்டும் கழன்று விழுந்தறுவாயில் இருந்தன. அப்பொழுது பசியால் விழித்துக்கொண்டு அழுத குழந்தை காலைத் தூக்கித் தொட்டிலை உதைத்தான்; உதைத்ததும் தொட்டிற் சக்கிரங்கள் இரண்டும் நொறுங்கிச் சுக்கலாய்விட்டன. தொட்டிலும் தொப்பென்று கீழே விழுந்துவிட்டது.

இவ்விதமான சந்தடியைக் கேட்டதும், அசோதைப்பிராட்டி ஓடோடியும் வந்தாள்; மிகுந்த பரபரப்போடு, கண்ணனை வாரியெடுத்து அணைத்துக்கொண்டிருந்த தாதியிடமிருந்து, குழந்தையை வாங்கிக்கொண்டாள். "என்னடி செய்தது?" என்று அவளைக் கேட்டாள்.

தாதியும், "அம்மா, இந்தக்குழந்தையை சாதாணக் குழந்தையென்று நினைக்காதீர்கள். பாலுக்காக அழுகிறான் என்று எடுக்கப்போனேன். அதற்குள் காலாலே தொட்டிலுக்கு ஒரு உதை கொடுத்தான். இரண்டு சக்கிரங்களும் அப்படியே நொறுங்கி நூறு சுக்கலாகிவிட்டன" என்றாள்.

"இது என்ன அதிசயமடி!" என்று ஆச்சரியப்பட்டாள் எசோதை. அப்பொழுது ஒரு அசரீரி வாக்கு உண்டாயிற்று. "அசோதாய்! ஸ்ரீமந் நாராயணனே உனக்குப் பிள்ளையாக வந்திருக்கிறான்" என்று.

"தளர்ந்தும் முறிந்தும் சகட அசுரர் உடல்வேறுப்
பிளந்துவீயத் திருக்காலாண்ட பெருமானே"

என்றும்

"தன் மகனாக வன்பேய்ச்சி தான் முலையுண்ணக்கொடுக்க
வன்மகனாய் அவளாவி வாங்கி முலையுண்ட நம்பி!"

என்றும்

"கருளக் கொடியொன்றுடையீர்! தனிப்பாகீர்!
உருளச்சகடமது உறக்கில் நிமிர்த்தீர்!"

என்று தேவர்கள் துதித்ததும் அசோதைப் பிராட்டியின் காதில் விழுந்தது.

தன் நாயகன் நந்தகோபன் சொன்ன விருத்தாந்தம் அவள் நினைவிற்கு வந்தது. கண்ணனை மடியிலே வைத்துக் கொண்டு. "கண்ணா! நீ வஸுதேவருக்குப் பிறந்த பிள்ளையல்லவா? நீ பிறந்தபோதே அவர் காலிலே இருந்த விலங்குகள் தாமாகக் கழன்றனவாமே. அவராலே நள்ளிருளிலே இங்கே கொண்டு வந்து விடப்பட்டாயாம். உன் மாமன் கஞ்சன் உன்னைக் கொல்வதற்கே அந்தப் பூதனையை அனுப்பினனம். இந்தச் சக்கிரங்களும் அவனே செய்த சூழ்ச்சியாக வேண்டும். வஞ்சமகள் சாகும்படியாகப் பாலுண்டாய். அன்று! இன்று சகடம் இற்றுப்போகும்படியாகப் பாய்ந்திட்டாய்! ஆயினும் பெற்ற மனம் பித்து. உன் பஞ்சியன்ன மெல்லடி நொந்திடும் என்று அஞ்சினேன் காண்." என்றாள். பிறகு, குழந்தையைக் கீழே கிடத்திவிட்டு, "அமரர்கோவே! வஞ்ச மகள் கொங்கை துஞ்ச வாய் வைத்த பிரானே! வன்பாரச்சகடம் இறச்சாடிய பாதா! உன்னை அறிந்துகொண்டேன். உனக்கு அஞ்சுவேன் 'அம்மம் தரவே" என்று கை கூப்பித்தொழுதாள். ஆனாலும், வெகு நேரம் அசோதையால் கண்ணனைப் புறக்கணித்திருக்க முடியவில்லை. மீண்டும் அவனை வாரியெடுத்து மார்போடு அணைத்துக்கொண்டு,

"நந்தன் பெறப்பெற்ற நம்பீ!
நானுகந்துண்ணும் அமுதே!
எந்தை பெருமானே! உண்ணாய்
என் அம்மம் சேமமுண்ணாயே"

என்று அவனுக்குப் பாலமுதூட்டத் தொடங்கினாள்.

அசோதைப் பிராட்டியைப் போலவே, ஆழ்வார்கள் முதலிய பக்தர்களும் பகவானுடைய பெருமைகளைக் கண்டு அஞ்சி ஒதுங்கி நின்று தொழுவதையும், அவனுக்குப் பக்தர்களிடமுள்ள பேரருளை நினைந்து அவனை நெருங்கி அனுபவிப்பதையுமே தொழிலாகக் கொண்டு வாழ்ந்தார்கள் என்பது அவர்கள் பாடிய பாசுரங்களால் விளங்குகின்றது.

த்யாகராஜ கீர்த்தனம்

—முன் பக்கத் தொடர்ச்சி

IV

ராகம் பிலஹரி — மிச்ர சாபு

(29-வது மேள ஜன்யம் ஆ. ஸரிகபதஸ் அ. ஸம்பூர்ணம்)

பல்லவி

கா கா	பா ; தா ;	ஸ்ா ; ;	ஸ்ா ; ஸா நீ
பெ ரு	கு பா	லு	பு ஜி .
தா தாரீ	ஸ்ா ஸ்ா நீ	தா பா ;	பா ; பா மா
. யிஞ் .	சி த .	னு . .	வு னு .
காரீ கா	பா ; தா ;	ஸா ; ;	ஸ்ா நீ தா பா
. . பெஞ்	சி ன	திங்	து . . .
தா ஸ்ா ;	; ; ; ;	; ; ;	; ; ; ;
க			
; ஸ்ா ரீ	க்ாரீ ரீஸ்ா	ஸ்ா ஸ்ா நீ	தா ; பா ;
தி ர	வ தி .	ஸு க .	தா .
; பா தா	ஸ்ா நீ தா பா	பா தா பா	மா கா காரீ
ய க	மா . . .	வ . .	ய . ஸு .
; ரீ கா	கா தா பா ;	மா கா ;	மா கா ரீ ;
நீ .	ட . னு	க : வி	பே . .
; ரீ கா	தா பா மா கா	ரீ ; ;	ஸா ; ; ;
ட ந்	து . க .	.	. .

(புஸ்தகங்களில் இந்தக் கீர்த்தனத்தை 'கண்டா' ராகம் ஆதி தாளத்தில் பாடவேண்டுமென்பதாய் கூறப்பட்டுள்ளது. ஆனால் எனக்கு மேலே காணப்படும் ராகத்தில் சாபு தாளத்தில் இக்கீர்த்தனத்தைக் கற்றுக் கொடுத்துள்ளார். அதன்படியே வெளியிட்டுள்ளேன்.)

தலைநிறைந்த கூந்தலே முகத்தின் அழகை எடுத்துக்காட்டுவது. கூந்தலே முக அழகை ஆக்குவதும், அழிப்பதும். கூந்தலழகையும்முக அழகையும் இன்றே கேசவர்த்தினியைக் கொண்டு விருத்திசெய்யுங்கள்.

அற்பகேசத்தைவிட அழகுக்கு ஹானி வேறில்லை. இதைப் பரிஹரிக்கக் கேசவர்த்தினியைவிடச் சிறந்த மருந்துமில்லை. இழந்த கூந்தலையும், இளமையையும் கேசவர்த்தினியைக் கொண்டு இன்றே பெறுங்கள்.

அழகுள்ளவர் ஒரு சிலரே. ஆனால் கூந்தலழகையோ கேசவர்த்தினி உபயோகத்தால் ஒவ்வொருவரும் பெறலாம். கேச சம்பத்து படைத்தவர் அதை இழக்காமல் கேசவர்த்தினி கொண்டு காப்பாற்றுங்கள். படைக்காதவர் கேசவர்த்தினியால் அதை அடையுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைக்காப்பது, விருத்திசெய்வது, அழகுபடுத்துவது விலை அணா 12. மேற்செலவுவேறு. எல்லாக்கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்.

தென் இந்திய ரஸாயன சாலை,

ஆர். எஸ். புரம் — கோயமுத்தூர்

1 மணியில் வாலிபம்!

ரமணவிலாசினி வடிகா

காமசக்தியை விருத்திசெய்து, துரித ஸ்கலிதத்தை நிறுத்தி, எல்லோருக்கும்சிற்றின்பத்தில் திருப்தியைத் தரும் பரம ஔஷதம். டப்பி ரூ. 1.

மதன மஞ்சரி பார்மஸி,

184, சைனாபஜார் ரோட், மதராஸ்.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ.2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ.5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ.5. ஆரூடம்3கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும ரோம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், திருநீர்மலை, குரோம்பேட்டை போஸ்டு, எஸ். ஐ. ஆர்.

அதன் வாசனையிலிருந்தே

அதன் பெயரைச் சொல்லட்டுமா?

அதுதான்

நரஸூஸ் காபி

இதர விவரங்களுக்கும், மெயில் ஆர்டருக்கும் விண்ணப்பித்துக் கோள்ளவும்.

நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி,

தலைமை ஆபீஸ்:—சேலம்.

MNCK 8 TM.

சுவாசத்தரால் அவதிப்படுவோருக்கு

மாய நிவாரணி

தவறாமல் பெப்ஸ உட்கொள்ளுங்கள்.

சுவாசகாசம், சுவாசப்பையைப் பலஹீனப்படுத்தும் ஜளிப்பு, இதர கோளாறுகளில் அவதிப்பட்டால் பெப்ஸ் தவறாமல் உட்கொள்ளுங்கள். இந்த அற்புத மாத்திரைகள் தேவதாரு காட்டு, காற்றின் அரிய பலன்களை அளிக்கும்.

பெப்ஸ் வாயில் கரைந்தவுடன் மருந்து பூர்வமான ஆவி, சுவாசத்துடன் சேர்ந்து சுவாசப்பைக்குச் செல்லுகின்றது. ஏரிச்சலேற்பட்ட சுவாசக் குழாய்கள், தொண்டைக்கு பெப்ஸ் சமனமூட்டி, ஜளிப்பை அறுத்து சுலபமாக சுவாசிக்க உதவுகின்றது. எப்பொழுதும் பெப்ஸ் கைவசம் வைத்திருங்கள்.

எல்லா மருந்து வியாபாரிகளும் பெப்ஸ் ரூ. 1. வீதம் விற்கின்றனர். ஏஜண்டுகள்:—மேஸர்ஸ் தாதா அண்டு கம்பெனி, பி. டி., மதராஸ்.

எப்பொழுதும் பெப்ஸ் உட்கொள்க.

PEPS

கிருமிநாச சுவாச மாத்திரைகள்

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி

வைத்தியசாலை,

பழனி. S. I.

கர்ப்பத்தைத்தடுக்க "ரஹாத்"

நிச்சயமான மருந்தாகும். மூன்று நாட்கள் உபயோகித்தால் கர்ப்பம் தரிக்காது. ஆர்டருடன் உத்திரவாத பாரமும் அனுப்பப்படும். விலை ரூபா 5/8. அல்லது 10 ஷில்லிங். மாதவிடாய் தவறாமல் ஏற்படும்.

Dr. S. H. KHAN, (S.M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

அரிய தமிழ் நாவல்கள்.

வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதியது.

	ரூ.	அ.
வைதேகி	2	8.
பத்மசுந்தரன்	2	8
சாருலோசனா	2	8
காதலின் கனி	2	8
ராதாமணி	2	8
தியாகக் கொடி	2	0
நவநீதகிருஷ்ணன்	2	0
சாமளநாதன்	2	0
மங்களபாரதி	2	0
சண்பகவிஜயம்	1	12
கௌரிமுகுந்தன்	1	12
ஸாரமதி	1	12
தயாநிதி	1	12
உணர்ச்சி வெள்ளம்	1	8
சந்தோஷமலர்	1	8
சோதனையின் கொடுமை	1	8
ராஜமோகன்	1	4
அனாதைப்பெண்	1	4
இன்பஜோதி	1	4
வானக்குயில்	1	4
கஸ்தூரி திலகம்	1	4
கானல் நீர்	1	4
புகழ்மாலை	1	4
கலா நிலையம்	1	4
ஜீவியச் சுழல்	1	4
ஆத்மசக்தி	1	4
படாடோபத்தின் பரிபவம்	0	8
ஜெயசஞ்சிவி	0	4
சுகுணபூஷணம்	0	4
அம்ருததாரா	0	4
அன்பின் சிகரம்	0	4
உளுத்த இதயம்	0	4

சுதேசமித்திரன்

புத்தகசாலை, சென்னை.

புஸ்தக விமர்சம்

டாக்டர் உ. வே. சாமிநாதையர்

எழுதியவர் "சுதேசமித்திரன்" உதவி ஆசிரியர், கே. சுந்தரராகவன். பி. எ; அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர். சென்னை, விலை ரூ 1.

ஆயிரம் பிறைகண்ட ஐயர் அவர்கள் 'என் சரித்திரம்' என்ற தலைப்புடன் எழுதி வந்த சுய சரிதம் முற்றுப்பெருமலே போய் விட்டது. அவர்களுடைய வாழ்க்கையின் முற்பகுதி மட்டுமே இதுகாறும் வெளி வந்திருக்கிறது. முதிர்ந்த அறிவும் சிறந்த அனுபவமும் வாய்ந்த பிற்பகுதியின் சரித்திரத்தை அவர்கள் எழுதி முடிக்காமலே இறைவன் திருவடி நீழலை அடைந்து விட்டார்கள். ஸ்ரீ சுந்தரராகவன் எழுதியுள்ள இந்நூல் அந்தக் குறையை ஒருவாறு நீக்குகின்றது.

தமிழில் இதுவரை வெளிவந்துள்ள ஜீவிய சரித்திரங்களுக்கும் இந்தப் புத்தகத்துக்கும் முக்கியமான வித்தியாசம் ஒன்று உண்டு. இந்நூல் 'இன்ன வருஷம் பிறந்தார், எந்த எந்தக் காரியங்களைச் செய்தார், எந்த வருஷம் பரமபதம் அடைந்தார்' என்பன போன்ற குறிப்புக்களுடன் நின்று விடவில்லை. சரித்திரபுருஷர் தமக்குக் கிடைத்த சாதனங்களை எவ்விதம் பயன்படுத்தி, எத்தகைய காரியங்களைச் செய்து முடித்திருக்கிறார், அவற்றைச் செய்து முடிக்க அவருக்கிருந்த நோக்கம் முதலியவற்றை நன்றாக ஆராய்ந்திருக்கிறார்.

சரித்திர புருஷருடைய நோக்கங்களையும் அவற்றை அனுபவத்தில் கொண்டு வருவதில் அவர் அடைந்துள்ள வெற்றிகளை ஆராய்ந்து கூறுவதே ஜீவிய சரித்திரத்தின் முக்கியமான அம்சமாகும். இந்நூலாசிரியர், ஐயர் அவர்களுடைய வாக்கைக்கொண்டே இவற்றை விளக்கக் காட்டியிருக்கிறார்.

சுயசரிதத்தில் காணப்படாத முக்கியத்வம் ஒன்றும் இந்நூலுக்கு உண்டு. ஐயர் அவர்கள் சில இடங்களில் தம்மைப்பற்றிய நிகழ்ச்சிகளைக் குறித்து, விட்டு அந்நிகழ்ச்சிகளால் தமக்கு ஏற்பட்ட பெருமையையும் புகழையும் விரித்துக் கூறாமல் சென்றுள்ளார்கள். ஆனால் நூலாசிரியர் அவற்றை உரிய இடத்துள் வைத்துக் கூறியிருக்கிறார்.

பீடிகை, இளமைப் பருவம், தமிழ்ப்பயிற்சி, பதவி கிடைத்தது, ஆராய்ச்சி, பிரஸிடென்ஸி காலேஜ், புகழும் புத்தகங்களும், தினசரி அலுவல், நோக்கங்கள் ஆகிய ஒன்பது அத்தியாயங்களுடன் ஐயர் அவர்கள் இதுகாறும் வெளியிட்டுள்ள நூல்களைப்பற்றிய குறிப்புடன் 'தமிழ்க் களஞ்சியம்' என்ற தலைப்போடு உள்ள அனுபந்தத்தையும் கொண்ட இந்நூல், மகாகனம் வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் முன்னுரையுடனும் மகா மகோபாத்யாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் சிறப்புரையுடனும் விளங்குகின்றது.

எளிய நடையில் சிரமமில்லாமலும் சலிப்புத் தோன்ருமலும் மேன்மேலும் படிக்க ஆர்வம் ஊட்டக் கூடிய முறையில் எழுதப்பட்டுள்ள இச்சிறு நூல் தக்க சமயத்தில் வெளிவந்த பிரசுரம் என்றே சொல்ல வேண்டும்.

* * * *

மஹா தேவ கோவிந்த ரானடே

ஸ்ரீ. எம். எஸ் சுப்ரமணிய ஐயர் எழுதியது; அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர்: விலை அணா 10.

இந்திய சுதந்திர இயக்கத்திற்கு அடிகோலியவர்களுள் ஜஸ்டிஸ் ரானடே ஒருவர். அப் பெரியார் நாட்டின் நன்மையை உத்தேசித்துப் பல துறைகளிலும் சேவை புரிந்தார். இவ்வருஷாரம்பத்தில் அவரது நூருவது ஜன்ம தின விழா கொண்டாடப்பட்டது. அதை யொட்டி ஸ்ரீமான் எம். எஸ். சுப்ரமணிய ஐயர் இச்சிறு நூலைத் தமிழ் நாட்டிற்கு உதவியுள்ளார். உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இனிய நடையில் ஆசிரியர் பெரியாரின் வாழ்க்கையில் காணப்படும் சில முக்கியமான சம்பவங்களை இதில் குறிப்பிட்டுள்ளார். புத்தகம் கதை போல மிகவும் ரஸமாக இருக்கிறது. பெரியாரின் பொன் மொழிகளும் இதில் சிறப்பாக இருக்கின்றன. நம் நாட்டுப் பெரு மக்களின் உன்னத சரிதைகளைப் பிரசுரித்து வரும் அல்லயன்ஸ் கம்பெனியாரின் தொண்டு தாய்நாட்டன்பர்களின் பாராட்டுக் குரித்தாகும்.

* * * *

காலைப் பிறை

எப். டபிள்யூ. பெயின் எழுதியது ஸ்ரீமதி கி. சாவித்திரி அம்மாள் மொழி பெயர்த்தது; கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர்: விலை அணா 10.

ஒரு மேனாட்டு கதாசிரியர் ஆங்கிலத்தில் எழுதிய கதை இது. கதையைப் படிக்கும் போது இது ஒரு பழைய ஸம்ஸ்கிருதக் கதையோ என்ற சந்தேகம் உதயமாகிறது. அவ்வளவு அழகாகவும் ரஸமாகவும் பொருத்தமாகவும் இந்நாட்டு நிலைமையைப் பற்றி எழுதியிருக்கிறார் ஆசிரியர். கதையைப் பற்றி இங்கு அதிகம் கூறத் தேவையில்லை. பெண்களையே வெறுத்த ஒரு அரசனை ஒரு ராஜகுமாரி எப்படித் தன் பக்கம் திருப்பி, அவனது காதலை ஸ்வீகரித்தாள் என்பதையே இக்கதை எடுத்துக் கூறுகிறது. என்ன அழகான போக்கு! எவ்வளவு ரஸமான சம்பாஷணைகள்! எவ்வளவு இன்பகரமான சந்தர்ப்பங்கள்! இப்புத்தகத்தை கையில் எடுத்து விட்டால் போதும்; அது முடியும்வரை கீழே வைக்க மனம் வருவதில்லை. ஸ்ரீமதி கி. சாவித்திரி அம்மாளின் மொழி பெயர்ப்பு மிகச் சிறப்புடன் சோபிக்கிறது. இதே மாதிரி, இதே ஆசிரியர் எழுதிய இதர புத்தகங்களை, ஸ்ரீமதி சாவித்திரி அம்மாள் மொழி பெயர்ப்பார் என்றும், அவற்றை கலைமகள் காரியாலயத்தார் பிரசுரித்துக்கொண்டே வருவார்கள் என்பதையும் அறிய, இப் புத்தகத்தைப் படித்து முடித்த எவருக்குத் தான் குதூஹலம் இராது?

* * * *

ஸரஸாவின் பொம்மை

சி. சு. செல்லப்பா எழுதிய சிறுகதைகள்; கலைமகள் காரியாலயம் மயிலாப்பூர்: விலை ரூபா 1-8-0

இந்த சிறுக்தைக் கொத்து உண்மையிலேயே ஒரு இலக்கிய விருந்தாகும். இதில் மொத்தம் பதினேழு கதைகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு விதம்: இனிமையுடன் எழுதப்பட்ட கதைகள்: உணர்ச்சியை உண்டாக்கும் கற்பனைச் சித்திரங்கள். படிக்கும் போது நாமும் கதா பாத்திரங்களுடன் சேர்ந்து சந்தோஷிக்கிறோம்: அவர்களுடன் கலந்து வருந்துகிறோம்: பலவித மனோபாவங்களும் நம்முள் எழும்பித் தாண்டவமாடுகின்றன. இம்மாதிரி நிலைமையைக் கிளப்புவது தான் கதைக்காரரின் திறமை. இந்த ஆசிரியர் தமது திறமையைப் பரிபூரணமாக நிரூபித்து விட்டார். ஏதாவது ஒரு கதை மற்றொன்றைவிடக் குறைவாக இருந்தால், நாம் பிரித்துப் பேச முடியும்: எல்லாமே வெகு நன்றாக இருக்கும்போது எதைப் பற்றித் தனியாகக் குறிப்பிடுவது? ஆகவே, ஒரு நல் விருந்தில் நாமும் பங்கிட்டு கொள்ளும்படி உதவிய கலைமகள் காரியாலயத்தைப் பாராட்டுவதே உசிதம்.

* * * *

வைகுந்தன் உயில்

சரத் சந்திரர் இயற்றியது: மொழி பெயர்த்தவர் அ. கி. ஜயராமன்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், விலை ரூபா 1.

சரத் சந்திரர் எழுதிய நவீனங்களுக்குத் தனி மதிப்பு உண்டு. வங்க பாஷையில் அவர் எழுதினர்: அவை இப்போது பல பாஷைகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு வருகின்றன. சரத் சந்திரருடைய கதைகளைப் படித்து இன்புருதவர்களே இப்போது இல்லை என்று கூறலாம். அவர் கதை கூறும் விதமும், கதையை அமைக்கும் முறையும். கதா பாத்திரங்களை சிருஷ்டிக்கும் இயல்பும் வாசகர்களை மகிழ்விக்கின்றன. ரஸமான சம்பாஷணைகளும், தினசரி வாழ்க்கையில் காணும் சம்பவங்களும் பிரதானமாக அவரது புத்தகங்களில் கலந்திருப்பதால், படிக்கும்போது நாம் யாவற்றையும் அனுபவித்து ஆனந்திக்கமுடிகிறது. இந்தக் கதைப்புத்தகத்தில் இரு சகோதரர்களது வாழ்க்கையை சரத் சந்திரர் வெகு அழகாகச் சித்தரித்துள்ளார். அவர்களைப் பலர் பலவிதமாகக் கெடுக்கப்பார்க்கின்றனர்: ஆயினும் சகோதரர் அந்நியோந்நியமாக வாழ்வதைப்பற்றிப் படிக்கும் போது எவருக்குத்தான் சந்தோஷம் இராது? உயர்தரமான கதை: படிக்கப் படிக்கத் தெகட்டாத கற்பனை. மொழி பெயர்ப்பு சிலாகிக்கத் தக்கதாகவே இருக்கிறது. ஸ்ரீ அ.கி. ஜயராமனின் இனிய தமிழ் படிப்பதற்கு ஆவலை அதிகரிக்கச் செய்கிறது. புத்தகம் மிகவும் நேர்த்தியான முறையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் புத்தகங்கள் யாவும் "சுதேசமித்திரன்" புத்தக சாலைகள் எல்லாவற்றிலும் கிடைக்கும்

நீதிக் கதைகள்

மாறிப் போன பெட்டி

★

ஸ்ரீ எ. எஸ். பி. ஐயர், ஐ. ஸி. எஸ்.
எழுதியது

பம்பாய் ஸ்டேஷனில் ரயிலை விட்டிறங்கும்போது, பிஜு ரினுடைய பெட்டியென்று நினைத்து, அப்பு வேறொரு பிரயாணியின் பெட்டியை எடுத்துக் கொண்டுபோய்விட்டான். வைத்தியருடைய மோட்டார் வண்டி தயாராயிருந்தது. வைத்தியரும் அவருடைய சாமான்களும் அந்தப் பெட்டியும் மோட்டாரில் சென்றன. வீடு சென்றதும், வைத்தியர் தன்பெட்டியைத் திறந்து க்ஷவரம் செய்து கொள்ளுவதற்கு வேண்டிய வஸ்துக்களை வெளியே எடுக்க பெட்டிக்குள்ளே தன் கையைப் போட்டார். அரை , அவுன்ஸ் நிரையுள்ள பொட்டளங்ளாக பல பொட்டளங்கள் அந்தப் பெட்டிக்குள்ளிருப்பதை அவர் கண்டார். அந்தப் பொட்டலங்களில், வலிதெரியாமலிருப்பதற்குப் பூசும் மருந்து வைக்கப்பட்டிருந்தது. 'அப்பு இவை என்ன?' என்று ஆச்சரியத்துடன் வைத்தியர் கேட்டார். பெட்டியிலிருந்த வஸ்துவைப் பார்த்துவிட்டு அப்பு, 'இது தங்களுடன் பிரயாணம் செய்த பிரயாணியின் பெட்டியாக இருக்க வேண்டும். நான் உடனே மோட்டார் வண்டியில் சென்று, இந்தப் பெட்டியை அவரிடம் கொடுத்து விட்டு, நம் பெட்டியை வாங்கிக் கொண்டு வந்து விடுகிறேன்' என்று சொன்னான். 'நீ அவ்வாறு செய்தால் இறந்து போக வேண்டியதுதான். இது பாம்பின் விஷத்தைப் போன்ற மிகக் கொடிய விஷம். பாலைக் கொடுத்து இதை ஏமாற்ற முடியாது. இது உன் உடம்பிற்குள் குண்டைப் பாய்ச்சி விடும். இது ஒரு விஷ மருந்து இரண்டு பவுன் நிறையுள்ள, இவ்வளவு மருந்தை வைத்துக்கொண்டிருப்பவர்கள் மரண தண்டனைக்குள்ளாவார்கள், என்று வைத்தியர் எடுத்துச் சொன்னார். 'நாம் இப்போது என்ன செய்வது?' என்றான் அப்பு.

'இந்தப் பெட்டியை வைத்துக் கொண்டிருந்த பிரயாணியின் அங்க அடையாளங்களைச் சொல்லி, போலீசாரிடம் கொடுத்து விடு' என்றார் வைத்தியர். 'ஆனால் இது தன்னுடையதென்று சொல்லிக் கொள்ள ஒருவரும் முன் வரமாட்டார்களே?' என்றான் அப்பு. 'போலீசார் எப்படியாவது இந்தப் பெட்டியின் சொந்தக்காரரைக் கண்டு பிடித்து விடுவார்கள். இந்தப் பெட்டி அவனுடையதென்று நிரூபித்து விடுவார்கள்' என்று வைத்தியர் சொன்னார், 'ஆனால் இது ஒரு வைப்பாட்டியையே அல்லது வேண்டாப் பண்டாட்டியையோ போன்றது. சொந்த மனைவியை ஒருவன் தன் மனைவி என்று ஏற்றுக் கொள்வான். வேண்டாப் பெண்டாட்டி தன் கணவனைத் தானே கோரிக் கண்டு பிடிக்க வேண்டும்' என்று அப்பு எடுத்துச் சொன்னான். 'ஆனால் ஒரு வித்தியாசம் மாத்திரம் இருக்கிறது. சாதாரணமாக மனைவிமார்கள் தங்கள் கணவன்மார்களைக் காட்டிக் கொடுத்து சிறைச் சாலைக்கு அனுப்பமாட்டார்கள்' என்று வைத்தியர் உறைத்தார்.

சில தினங்களுக்குப் பிறகு, வலியில்லாமலிருக்க மேலே தடவப்படும் மருந்தைத் திருட்டுத் தனமாக வியாபாரம் செய்பவனைப் போலீஸார் கண்டு பிடித்து விட்டனர். அவனுக்கெதிராக அப்பு சாக்ஷி சொன்னான். 'இந்தப் பெட்டி என்னுடையதென்று உனக்கு எப்படித் தெரியும்?' என்று குறுக்கு விசாரணையின் போது, குற்றவாளி அப்புவைக் கேட்டான். (பிஜுர் என்னும் வைத்தியரும், நீயும் தான் அன்றைய தினம் முதலாவது வகுப்பு வண்டியில் பிரயாணம் செய்தீர்கள். இந்தப் பெட்டி அவருடையதல்ல, அதனால்தான் இது உன்னுடையதென்று நான் தீர்மானித்தேன்' என்று அப்பு பதில் அளித்தான். 'நான் இந்தப் பெட்டியைத் திறந்ததை நீ பார்த்தாயா?' என்று குற்றவாளி கேட்டான். 'இல்லை-நீ திறக்க மாட்டா யென்று எனக்குத் தெரியும்' என்று அப்பு சொன்னான். (நீ ஏன் அப்படிச் சொல்கிறாய்? அந்தப் பெட்டியிலிருக்கும் வஸ்து எனக்குத் தெரியுமென்று நீ எப்படி சொல்லக் கூடும்?' என்று குற்றவாளி கேட்டான். 'இரண்டு காரணங்கள் சொல்கிறேன், கேள். இந்தப் பெட்டியை திரும்பிப் பெற நீ முயற்சி செய்யவில்லை. எங்களுடைய பெட்டியையும் நீ திருப்பிக் கொடுக்கவில்லை' என்று அப்பு சொன்னதைக் கேட்டு, நீதிஸ்தலத்திலிருந்தவர்கள் சிரித்தனர். இரண்டு வருஷங்கள் சிறை வாசம் செய்யும்படி, குற்றவாளி தண்டிக்கப் பட்டான். அப்பு, பிஜுரின் மனைவியிடம் 'குற்றவாளிக்கு இரண்டு வருஷங்கள் தண்டனை விதிக்கப்பட்டது. நம்முடைய பெட்டியைத் திருடியதற்கு ஒரு வருஷம்; அவனுடைய பெட்டியை வைத்து விட்டுப் போனதற்கு ஒரு வருஷம்' என்று சொல்லிச் சிரித்தான். 'நம்முடைய பெட்டியில் க்ஷவரம் செய்து கொள்ள உபயோகப்படும் வஸ்துக்கள் தானிருந்தன' என்று வைத்தியர் சொன்னார். 'அதனால் அவன் நன்றாக க்ஷவரம் செய்யப்பட்டான்' என்று சிரித்துக் கொண்டே அப்பு சொன்னான்.

குற்றத்திற்கு பதில்

விஷ்ணு சாஸ்திரி என்னும் புரோகிதனுக்கு திருப்தியே கிடையாது. அடிக்கடி அவன் பிஜுரிடம் இலவசமாக சிகிச்சை செய்து கொள்வது வழக்கம், ஒருநாள் அவன் பிஜுரிடம் சென்றபோது, அப்புவும் இருந்தான். 'வைத்தியரே, நான் சொல்வதைக் கேளுங்கள். ஸ்ரீ கிருஷ்ணர் கபட நாடக சூத்ரதாரி. அவர் மோசம் செய்வதில் கெட்டிக்காரர். அவர் பகவத் கீதையில் "எவனொருவன் எப்போதும் என்னைப்பற்றியே சிந்தித்துக் கொண்டு, வேறெதைப் பற்றியும் நினைக்காமலிருக்கிறானோ, அவனுடைய க்ஷேமத்திற்கும், அவனுடைய குடும்பத்தின் க்ஷேமத்திற்கும் நான் பொறுப்பாளியாயிருப்பேன்" என்று சொல்லியிருக்கிறார். அதன்படி நான் சதா அவரையே நினைத்து பகவத் கீதையைப் பாராயணம் செய்து கொண்டு வருகிறேன். ஆனால் அவர் எங்களுடைய க்ஷேமலாபத்தை எவ்வளவு தூரம் கவனிக்கிறார் என்பதைக் கேளுங்கள். என்னுடைய மனைவி கட்டத் துணியில்லாமல் கந்தையைக் கட்டிக்கொண்டிருக்கிறாள். என்னுடைய குழந்தைகளுக்கு சௌக்கியமென்பதென்னவென்றே தெரியாது. என்று விஷ்ணு சர்மா வைத்தியரிடம் சொன்னான். 'என்தன் புள்ள சாஸ்திரியாரே! தன்னுடைய கடமையைச் சரியாகச் செய்யாத ஒருவனுக்கு, ஸ்ரீ கிருஷ்ணர் ஒரு போதும் உதவி செய்யமாட்டார்' என்று அப்பு தன் அபிப்பிராயத்தைக் கூறினான். 'நான் என் கடமையைச் சரிவரச் செய்யவில்லையென்று நீ எப்படிச் சொல்ல முடியும்?' என்று கோபத்துடன் சாஸ்திரியார் கேட்டார், 'தாங்கள் ஸ்ரீ கிருஷ்ணரைப்பற்றியே நினைத்துக் கொண்டும், வேறெதைப் பற்றியும் நினைக்காமலேயே இருந்திருக்கும் பக்ஷத்தில், மனைவி கந்தையைக் கட்டிக் கொண்டிருப்பதைப்பற்றியும், குழந்தைகள் சௌக்கியமாக இல்லாமலிருப்பதைப்பற்றியும் தங்களுக்கு எப்படி தெரிய வந்தது?' என்று அப்பு கேட்டான்.

தமிழ்ப்பெரியார்

★

ஸ்ரீ வை. மு. கோபால கிருஷ்ணமாச்சாரியார் ஷஷ்டி அப்த பூர்த்தி

★

ஸ்ரீ உ. வே. வை. மு. கோபால கிருஷ்ணமாச்சாரியார் அவர்களைத் தமிழ் உலகம் நன்கு அறியும். வடமொழியிலும், தென்மொழியிலும் வல்லுனர் என்றும், தமிழ் லெக்ஸிகனில் வடமொழி தென்மொழிப் பண்டிதராய் இருந்ததன்றி, கம்பராமாயணம் வில்லிபாரதம் முதலிய அழியா நூல்களுக்குச் சாலச் சிறந்த உரைகள் இயற்றியும் திவ்யப்ரபந்தத்தை மிக்கவும் பரிசீலனை செய்து வெளியிட்ட திருப்பணியில் ஈடுபட்டும் விளங்கியிருப்பது யாவரும் அறிந்தது. இப் பெரியார் நாளது ஐப்பசிமீ 4உ (20-10-1942)ல் அறுபது ஆண்டு நிறைவு (ஷஷ்டி அப்த பூர்த்தி) அடைகிறார்.

கல்விக்கும் சமயங்களுக்கும் அவர் ஆற்றியுள்ள திருத்தொண்டில் தமக்கு உள்ள நன்மதிப்பைச் செலுத்த எண்ணி அத்துறைகளில் ஈடுபாடு உடைய நண்பர் கூடி ஒரு சபையைக் கூட்டியுள்ளனர். தமக்கு அப்பெரியாரிடம் உள்ள ஈடுபாட்டிற்கு அடையாளமாக ஞாபகச் சின்னநாலும் நன்மதிப்பு அறிகுறியும் வழங்க எண்ணியுள்ளார்.

அந்த சபையார் தாம் மேற்கொண்ட நோக்கங்களில் பொது ஜன ஆதரவைக்கோரியுள்ளனர். கட்டுரைகளையும் வாழ்த்துச் செய்திகளையும் சென்னை சேப்பாக்கம் சென்னை சர்வகலாசாலை தமிழ் ஜூனியர் லெக்சரர் ஸ்ரீ வி. வெங்கட்டராயலு ரெட்டியார் அவர்களுக்கு வெகுசீக்கிரம் அனுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஆடைகளை அதிக வெண்மையாக்குவதற்கென்றே - ஓர் விசேஷமான ஸோப்பு

★ வீட்டில் துணிமணிகள் வெளுப்பதை அதிக லகுவாக்குகிறது.
★ மெல்லிய ஆடைகளுக்கு கேடிழைக்காது.
★ மிருகக் கொழுப்பற்றது.

டாம்கோ
விற்பனை இலாகா :—
1, வாரன் ரோட், பீமன் பேட்-மைலாப்பூர், மதராஸ்.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமி., டாடாபுரம் & பம்பாய்.

F S. 1955.

சிறுவர் பகுதி

★

குரு பக்தி

★

தியாகராஜன்
எழுதியது

முன்னொரு காலத்தில் நமது தேசத்தின் வட பாகத்தில் அயோதர் என்று ஒரு ருஷி இருந்தார். அவர் பரம பாகவத ஸிரோமணி. ஸத்குண புருஷர்; அனேக சிறுவர்கள் வித்யார்த்திகளாக அவரை யடைந்து கலை பயின்று வந்தனர்.

அந்த அயோத ரிஷியிடம் கலை பயில வந்த மாணவருள் உபமன்யு ஒருவன். உபமன்யு மற்றைய வித்யார்த்திகளை விடக் கல்வியிலும், ஆசார்ய பக்தியிலும் நல்லொழுக்கத்திலும் மேம்பட்டவனாக விளங்கினான். ஆதலின் அயோதர் அவனிடம் அதிக அன்பு பாராட்டி வந்தார். உபமன்யு ஆசிரியர் கட்டளைப்படி, தினந்தோறும் பசுக்களைப் பகல் முழுதும் மேய்த்துக் காப்பாற்றி, சாயங்காலத்தில் ஆசிரியரிடம் வித்தை பயின்று வந்தான்.

அயோதர், தம்முடைய மாணவர்களுள் உபமன்யு தேக வலிமையுடன் இருப்பதைப் பார்த்து, "உபமன்யு! நீ எதனை உண்ணுகிறாய்? அதிக பலமுள்ளவனாக இருக்கிறாயே" என்று வினவினார். உபமன்யு, "குருவே! பிக்ஷையினால் உயிர்வாழ்கிறேன்" என்று பணிவுடன் பதில் அளித்தான். குரு அவனைப் பார்த்து, "பிக்ஷையை என்னிடம் காட்டாமல் உண்ணுதே" என்று ஆக்ஞாபித்தார். மறுநாள் முதல் பிக்ஷை எடுத்து வந்து ஆசிரியருக்குக் காட்டினான். அவர் அந்த பிக்ஷை முழுவதையும் வாங்கிக்கொண்டார்.

அயோதர், உபமன்யுவிடம் பிக்ஷை முழுவதையும் தாம் வாங்கிக்கொண்ட பிறகும் அவன் இளைக்காமலிருப்பதைப்பார்த்து, "உபமன்யு! நீ இப்பொழுது எப்படி ஜீவனம் செய்கிறாய்?" என்று கேட்டார். கேட்டவுடனே, அவன், 'ஸ்வாமி! உங்களிடம் முதல் பிக்ஷையைக் கொடுத்துவிட்டு இரண்டாமுறை பிக்ஷையெடுத்து உண்பதால் பிழைத்து வருகிறேன்" என்று சொன்னான். உடனே குரு, "அப்பா! பிக்ஷை வாங்கிப்பிழைக்கிற மற்றவர்களுடைய பிழைப்புக்கும் விரோதம் செய்கின்றாய். நீ அப்படிச் செய்யாதே" என்று சொன்னார். அவன், 'சரி' என்று சொல்லி வழக்கம் போலப் பசுக்களைமேய்ப்பதும் குருவை வணங்குவதும் செய்து கொண்டு வந்தான்.

ருஷி, தாம் அப்படிச் செய்தும் அவன் உடல் தளராமலிருப்பதைக் கண்டு, "உபமன்யு! நீ இப்பொழுது எப்படி ஜீவிக்கிறாய்!" என்றார். சிஷ்யன், "ஐயா! இப் பசுக்களின் பாலால் பிழைக்கிறேன்" என்றான். உடனே, குரு, இது ஒழுங்கான குரு குல வாசம் அன்று. பாலை நீ சாப்பிட நான் உனக்கு அனுமதி அளிக்கவில்லையே" என்று சொல்ல, அவன், 'இனி அப்படிச் செய்வதில்லை' என்று உறுதி கூறிச் சென்றான்.

இவ்வாறு அவனை குரு கட்டுப்படுத்தியும் அவன் தேகவலிமை குன்றவில்லை. உபமன்யு, தாயின் பாலைக் குடித்து வாய்க்கு வெளியில் ஒதுக்கின கன்றின் நுரையை உண்டு வந்தான். இதையறிந்த அயோதர் கோபங்கொண்டார். கன்றின் வாய்க்கு வெளியில் ஒதுக்கின நுரையைக்கூட . உண்ணக்கூடாது என்று கட்டளையிட்டார். உபமன்யு ஆகாரமில்லாமல் பசுக்களை மேய்த்து வந்தான். அவன் தன் ஆசிரியரால் மறுக்கப்பட்டதால் பிக்ஷையும், புசிக்கவில்லை; வேறொரு பிக்ஷையும் எடுக்கவில்லை; பாலும் பருகவில்லை; நுரையும் உட்கொள்ளவில்லை.

உபமன்யு பசியால் பரிதவித்தான். பசியின் கொடுமையால் காட்டிலிருந்த சில இலைகளைப் பறித்து உண்டான். அதனால் கண்களை இழந்து, தவறி ஓர் கிணற்றில் விழுந்தான். சூரியாஸ்த மனம் ஆகியும் உபமன்யு வீட்டுக்கு வராமல் இருப்பதை அறிந்த அயோதர் மற்ற மாணவர்களுடன் அரணியஞ்சென்று, 'அப்பா, உபமன்யு! எங்கே இருக்கிறாய்? வா" என்று கூவி அழைத்தார்.

ஆசிரியர் குரலைக்கேட்ட உபமன்யு, "ஐயா! இதோ நான் இந்தக் கிணற்றில் விழுந்திருக்கிறேன். பசியின் கொடுமையால் சில இலைகளைப் புறித்து உண்டேன். அதனால் கண்களை இழந்தேன். வழி தெரியாமல் கிணற்றில் விழுந்துவிட்டேன்" என்று கத்தினான். ருஷி, "உபமன்யு! நீ கிருஷ்ண பரமாத்வாவைத் தோத்திரம் செய். அவர் உனக்குக் கண் பார்வையைக் கொடுப்பார்" என்று தேற்றினார். குருவின் கட்டளைப்படியே உபமன்யு கண்ணனைத் தோத்திரம் செய்தான்.

உபமன்யுவின் பக்திக்கு மெச்சி கண்ணன் அவனிடம் அணுகி, "அன்பனே! இந்தப் பாலை வாங்கி முதலில் சாப்பிடு" என்றார். உபமன்யு "ஐயனே! நான் குருவுக்குத் தெரியாமல் எதையும் சாப்பிடமாட்டேன்" என்று உறுதியாகக் கூறினான். அது கேட்டு பரமாத்மா, "உபமன்யு! உன் குரு பக்தியின் மேம்பாட்டால், உன் மேல் அன்பு கொண்டேன். உன் ஆசிரியர் தந்தங்கள் எக்காக இருக்கின்றன. உனக்கோ பொன்னாக இருக்கட்டும். கண்களைப் பெறுவாய். சகல வித்தைகளையும் ஓதாது உணர்வாய்" என்று வாழ்த்தி மறைந்தார். உபமன்யு கண்களைத் திரும்பப் பெற்றான். ஓட்டோடியும் சென்று நடந்த விஷயங்களை குருவினிடம் உரைத்தான். அயோதர் அவன் பால் கருணை கொண்டு 'பரமாத்மா அருளியபடி உனக்குக் கல்விப் பயன் கைகூடும். வேத சாஸ்திரங்களெல்லாம் விளங்கும்" என்று அனுக்கிரகம் செய்தார்.

உபமன்யு தனது குரு பக்தியின் மேன்மையினால் எல்லாக்கலைகளம் இனிது விளங்கப் பெற்றுப் புகழுடன் விளங்கலானான்.

நபுண்சகத் விரோதி

அம்ருதம் போன்ற ஏ. பி. யாகுடி

இளமையும், வீரியமும் அளிக்கும் ஔஷதம். ரத்தசுத்தியளித்து, தளர்ந்த நரம்புகளுக்கு வலுவூட்டி, வீரிய விருத்தியளித்து, இல்லற வாழ்க்கையை இன்பமாய்க்கழிக்க உதவும். பாட்டில் ரூ. 10.

ஏ. பி. எண்ணெய்.

வெளிப்பூச்சுக்கு ; எல்லா தோஷங்களையும் நிவர்த்திக்கும் அருமையான தைலம் பாட்டில் ரூ. 15.

மதன மஞ்சரி பார்மஸி,
184, சைனாபஜார் ரோடு, மதராஸ்.
ஏஜண்டு : எஸ். டி. பல்டானே
புரசவாக்கம்.

இருமல், சளி, மார்புக் கோளாறுகளை ஒழியுங்கள்

• இருமல், ஜளிப்பு, தொண்டை உபத்திரவங்களால் அவதிப்பட்டால். பெப்ஸ் கிருமிநாச சுவாச மாத்திரைகள் நிச்சய நிவாரணியாகும்

வாயில் கரைந்தவுடன் ஏற்படும் மருந்து பூர்வமான ஆவி சுவாசத்துடன் கலந்து, சுவாசப்பைக்குள் செல்லுகின்றது தொத்து கிருமிகளை பெப்ஸ ஒழித்து விடும். சுவாசக் குழாய் அடைப்பை நீக்கி, தொண்டைக்கு சமன மூட்டி பாதுகாக்கின்றது



எல்லா மருந்து வியாபாரிகளும் பெப்ஸ் ரூ 1. வீதம் விற்கின்றனர். ஏஜண்டுகள்: மெஸர்ஸ் தாதா & கம்பெனி பி. டி. மதராஸ்.

எப்பொழுதும் பெப்ஸ் உபயோகியுங்கள்

PEPS

கிருமி சுவாச மாத்திரைகள்